புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

Vol.5: Issue. 4, October 2025

ISSN : 2583-0139

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

Vol.5: Issue –4, October– 2025 ISSN:2583-0139

புலம்: பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பதறிவு - காலாண்டிதழ்

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

பதிப்பாசிரியர்

முனைவர் ச.தங்கமணி

Editor-in-Chief

Dr S.Thangamani

இணைப் பதிப்பாசிரியர்

முனைவர் ஆ.முத்தையன்

Associate –Editor

Dr A. Muthaiyan

ஆசிரியர் குழு

முனைவர் மனோன்மணி தேவி

முனைவர் ஜா.அமிர்தலெனின்

முனைவர் ச.கோபிநாத்

முனைவர் க.வெள்ளியங்கிரி

முனைவர் சா.யமுனாதேவி

முனைவர் இரா.கோகுல்

முனைவர் ரா.பிரேம் குமார்

நிறுவனர்

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்

3/199 ஆ.கூடலூர், ஆய்ந்தூர் (அஞ்சல்)

கண்டாச்சிபுரம், விழுப்புரம் - 605755

editor@pulamejournal.com

editor@masivanpathippagam.com

pulamejournal@gmail.com

+919486069548

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2025 • All Rights Reserved •

Index

S.No	Title & Author	Pages
1	The status of women in the thirteenth Maiyavadi novel /பதிமூனாவது மையவாடி புதினத்தில் பெண்களின் நிலை **Antony Raja. V / அந்தோணி ராஜா.வே,**	01
2	Social life in the Pommai Manithargal Short Story Collection / பொம்மை மனிதர்கள் சிறுகதை தொகுப்பில் சமூக வாழ்வியல் **Periyaswamy. B / பெரியசாமி.பீ**	08
3	Valluvar's Mathematical Thinking with Tamil Numerology / தமிழர் எண் கணித முறையுடன் வள்ளுவரின் கணிதம் சார்ந்த சிந்தனை **Vijayaragavan G / விஜயராகவன். க**	18
4	Stories in the TheruKoothu Performance Area / தெருக்கூத்து நிகழ்த்து வெளியில் கதைகள் **Venkadesh. P / வெங்கடேஷ். பெ**	28

பதிமூனாவது மையவாடி புதினத்தில் பெண்களின் நிலை

The status of women in the thirteenth Maiyavadi novel

அந்தோணி ராஜா.வே, தமிழ்த்துறை, பார்க்ஸ் கல்லூரி, திருப்பூர்.

Antony Raja. V, Tamil Department, Park's College, Tiruppur.

ORCID : https://orcid.org/0009-0004-4411-4736

DOI: 10.5281/zenodo.17417890

Abstract

Researchers say that women were in the leadership position in the matriarchal society. Due to cultural changes, the power of women in the matriarchal society was taken over by men. Women have been facing various difficulties since the beginning. In today's times, even though women are advanced in education and economy, it still creates problems for them. Even though they have achieved high status in economy, education, etc., their lives are in question. The reason is that women face various hardships at various stages of their education and work. This article examines the situation where women have to face various kinds of problems and live against the tide to survive in their lives, presenting the thirteenth Maiyavadi novel.

ஆய்வுச்சுருக்கம்

தாய்வழிச் சமூகத்தில் தலைமைப் பொறுப்பில் பெண்கள் இருந்தனர் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். கலாச்சார மாற்றங்களால் தாய் வழிச் சமூகத்தில் இருந்த பெண்களின் அதிகாரம் ஆண்களால் கைப்பற்றப்பட்டது. பெண்கள் ஆரம்ப காலம் முதல் பல்வேறு இடர்பாடுகளுக்கு ஆளாகினர். இன்றைய காலகட்டங்களில் பெண்கள் கல்வியிலும், பொருளாதாரத்திலும் மேம்பட்டவர்களாக இருந்தாலும் அது அவர்களுக்கு சிக்கலை உண்டாக்குகின்றன. பொருளாதாரம், கல்வி போன்றவைகளில் உயர்நிலை கிடைத்தாலும் அவர்களது வாழ்க்கை கேள்விக்கு உள்ளானது. காரணம், பெண்கள் கல்வி கற்கும் இடங்களிலும் வேலை பார்க்கும் இடங்களிலும் பல்வேறு நிலைகளில் அவர்கள் இன்னல்களை சந்திக்கின்றனர். பெண்கள் தங்கள் வாழ்வில் நிலைத்திருக்க பல்வேறு வகையான சிக்கல்களை எதிர்கொண்டு எதிர்நீச்சல் போட்டு வாழ வேண்டிய நிலை நிலவுவதை பதிமூனாவது மையவாடி புதினத்தை முன்வைத்து இக்கட்டுரை ஆராய்கிறது.

Keywords: கல்வி, பொருளாதாரம்,சமூகம், மக்கள், அரசியல், சமவத்துவம்.

முன்னுரை

உயிரினச் சூழலில் பெண், ஆண் என்ற பாலின அடையாளப்படுத்தல் மனிதச் சமூகத்தில் உற்பத்தியானதாகும். சமூகத்தில் ஆண்களுக்குரிய செயல்களையும் பெண்களுக்கு உரிய பழக்கவழக்கங்களையும் மக்கள் வகுக்கத் தொடங்கினர். சமூகத்தில் பெண்களுக்குத் தனி நீதியைக் கட்டமைத்தனர். பிற்காலத்தில் பெண்கள் இல்வாழ்க்கைக்கு மட்டுமே உகந்தவர்கள் என்ற மனோபாவம் சமூகத்தில் நிலைநிறுத்தப்பட்டது. பெண்களை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளே வரையறுத்து வந்தனர். இது பெண்களை ஆண்கள் பிற்காலத்தில் அடிமைகளாக வழி நடத்த தொடக்கப்புள்ளியாக அமைந்தது.

பெண்கள் அடிமைத் தனம் ஆணின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்த கடைபிடிக்கப்பட்ட அமைப்பு முறையாகும். ண்களுக்கான நியாயங்கள் பெற பேரணியாய் அணி வகுக்கச் செய்து பெண் உரிமையை பெறச் செய்தவர் இலண்டன் மாநகரில் பிறந்த மேரி உல்ஸ்டன் கிராபிட் எனும் பெண்மணி ஆவார். அவரை பெண்ணுரிமை வரலாற்றின் கலங்கரை விளக்கம் என்று கூறலாம். இன்றைய நிலையில் பெண்கள் சமூகம், குடும்பம், வேலை பார்க்கும் இடங்களில் எனப் பல்வேறு இடங்களில் பலவகையான பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர் என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணியம் - சொல் விளக்கம்

ஆங்கிலத்தில் 'Feminism' என்று வழங்கப்படும் கலைச் சொல் பெண்ணியம் என்று பொருள்படும். இந்த ஆங்கிலச் சொல் 'Femine' என்ற இலத்தீன் மொழியிலிருந்து உருவானதாகும். "'பெண்' என்னும் சொல்லுக்கு பெண்மைக்குரிய இயல்பினை உடையவள்". (ச. முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப. 2) என்று பொருள் கொள்ளப்படுக்கின்றது.

பெண்ணியம் என்ற சொல், பெண் விடுதலை, பெண்ணடிமை, பெண்ணுரிமை, பெண்நிலை ஏற்பு, பெண்ணிலைவாதம் எனப் பல வகைகளில் அமைந்துள்ளது.

பெண்ணியம் என்ற சொல்லுக்குத் தெற்காசிய நாடுகள்,

"பெண்கள் சமூகத்திலும் அலுவல்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் இந்நிலையை மாற்றியமைக்க, ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டும், செயற்படும் முயற்சிகளும்". (ச. முத்துச் சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப. 1) என்ற விளக்கம் பொருத்தமானதாகக் கூறுகின்றார் முத்துச் சிதம்பரம்.

பெண்ணிய இயக்கம்

பெண்களின் அடிமைத்தனத்திற்கு எதிராக எழுந்தது இவ்வியக்கம். இந்த இயக்கம் பெண்களின் விடுதலை, ஒடுக்கு முறைகள், விழிப்புணர்வின்மை, பொருளாதாரம், அரசியல், சமத்துவமின்மை போன்றவற்றினை பேசுகிறது. பெண்ணியத்திற்கு அடிப்படையானது

சுதந்திரம், கருத்துரிமை ஆகும். முதன்முதலில் பிரான்ஸ் நாட்டில் பெரும் ஆதரவினைப் பெற்று பெண்ணிய இயக்கமாக உருவெடுத்தது. பின்பு அமெரிக்க மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் பெருவளர்ச்சி அடைந்தது.

புதினம் காட்டும் பெண்ணியம்

பதினாறாவது மையவாடி புதினத்தில் வரும் ஏஞ்சல் சிஸ்டர் என்கிற கதாபாத்திரம் தன் ஆசைகளை விட்டு ஒழித்து கிறிஸ்த்துவிக்கு தொண்டு செய்திட வந்தாள். பின்பு துறவறம் மடத்தில் நடக்கும் அவல நிலையைக் கண்டு மனம் உடைந்து மறைமுகமாக எதிர்ப்பைக் காட்டுகிறாள். அவள் அடையும் துன்பங்களையும் எதிர்கொள்கிறார் என்பதனைச் சுட்டிக்காட்டுக்கிறது.

ஏஞ்சல் சிஸ்டர்

ஏஞ்சல் சிஸ்டர் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரம் இயற்கையின் செழிப்பினைக் கொண்ட சிவகிரி அருகில் உள்ள கல்லுப்பட்டி கிராமம் டொமினிக் ஆரோக்கிய மேரி தம்பதியினரின் மூத்த மகள் அன்னமேரி இளையவள் ஏஞ்சல். ஏஞ்சல் எட்டாம் வகுப்பு வரை கல்லுப்பட்டியிலும் உயர்நிலை வகுப்பினை சிவகிரியிலும் படித்தாள். சிவகிரியில் உயர்நிலைக் கல்வி பயிலும் போது பாண்டியன் என்பவனை ஏஞ்சலுக்குப் பிடித்துப் போயிற்று. ஏஞ்சல் பாண்டியன் மீது மிகுந்த அன்பும் காதலும் கொண்டிருந்தாள். உயர்கல்வி படிப்பிற்கு பின்பு பாண்டியன் பயில வேண்டும் என்ற விருப்பத்தினை ஏஞ்சலிடம் கூறினான். ஆனால் டொமினிக் வாத்தியார் தான் பிள்ளைகளை டாக்டராகவோ, கலெக்டராகவோ ஆக்காமல் விடமாட்டேன் என்று சபதம் போட்டு படிக்க வைக்கிறார். ஆனால் ஏஞ்சலுக்கு தன் அம்மா, அப்பா போல வாத்தியாராக வேண்டுமென்ற ஆசையினைப் பாண்டியன் தூண்டிவிட்டு செல்கிறான்.

ஆனால் ஏஞ்சலின் வீட்டில் தனது அப்பா மேற்படிப்புக்காக கல்லூரிக்கு மனு போடும் வேலையில் தீவிரமாக இயங்குகிறார். ஏஞ்சலின் பேச்சில் மாபெரும் புயல் உருக்கொண்டது. தான் கல்லூரிக்குப் போக விருப்பம் இல்லை என்றும் தனக்கு வாத்தியாராக வேண்டும் என்ற ஆசையினையும் கூறுகிறாள். இதனால் டொமினிக் வாத்தியார் ருத்ர தாண்டவம் ஆடினார். நீ கலெக்டாரோ, மருத்துவரோ ஆகவேண்டாம் ஆனால் மாஸ்டர் டிகிரி கண்டிப்பாக படித்தாக வேண்டும் என்றும் இதுதான் தனது இலட்சியம் என்றும் கூறுகிறார்.

வேறு வழியின்றி வாத்தியார் வேலை படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்ததோடு கல்லூரியில் சேர்ந்தாள். ஏஞ்சல் தந்தையின் அகங்காரம், பிடிவாதத்தால் தன்னை இழந்த ஏஞ்சல் முதன்முதலாக டொமினிக் வாத்தியாரை வில்லனாக பார்த்தாள். ஏஞ்சல் தனிமையைத் தேடி விரும்பத் தொடங்கினார். அலங்காரம், ஆடம்பரம் போன்றவற்றின் மீதான தாக்கத்தைக் குறைத்துக் கொண்டாள். இறுதியாக கடவுளுக்கு தன் வாழ்வினை அர்ப்பணித்தாள் ஏஞ்சல்.

ஏஞ்சல் துறவறம் பூண்டத்திலிருந்து மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் ஞான போதன வகுப்புகளை எடுத்து வந்தாள். ஞானபோதன வகுப்பில் கருத்தமுத்து என்ற மாணவனை முதலில்

பிடிக்கமால் போகப் பிறகு பிடித்த மாணவனாக மாறி விட்டான். கருத்த முத்துவின் பேச்சும் செயல்பாடுகளும் ஏஞ்சல் சிஸ்டருக்கு பிடித்துப் போனதாக மாறிவிட்டது.

பெரியதாய் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது இல்லறம். இவ்வில்லறத்திற்கு அச்சாணி போன்றவள் பெண். நல்ல இல்லறத்தை உருவாக்குவது அவளது முக்கியப் பொறுப்பாகும்.

“மழைதிளைக்கும் மாடம்ஆய் மாண்பமைந்த காப்பாய்
இழை விளக்கு நின்றிமைப்பின் என்ஆம்? -விழைதக்க
மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம்
காண்டற்கு அரியதோர் காடு”. (நாலடி. 361)

மடமாளிகைகளும், மிகப்பெரிய வீடு இருந்தாலும் பெருமைக்குரிய மனைவி இல்லையென்றால் அது வீடாகாது. அந்தவகையில் பெரியதாய் கதாபாத்திரம் தன்னுடைய கணவனுக்கு உற்ற துணையாக விவசாயத்தில் துணை புரிந்து வந்தாள். தன்னுடைய கணவன் சில நாட்களில் வெளியூர்களுக்கு கூத்து நடத்த சொல்லும் பொழுது தன்னுடைய மாடுகளையும், விவசாய நிலங்களையும் முழுமையாக பராமரித்து கொண்டு வந்தாள்.

அந்தோணியம்மாள்

இக்கதாபாத்திரம் கணவனால் கைவிடப்பட்டப் பெண் ஆவாள். பத்தாண்டுக்கு முன்னர் பஞ்சு மில்லில் பதிவு ஆளாக வேலைப் பார்த்து வந்தான் அந்தோணியம்மாளின் கணவன் வியாகப்பன். வேலைப் பார்க்கும் மில்லில் வேற்றொருப் பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பால் அந்தோணியம்மாளை விட்டுச் சென்று விடுகிறான். தன் கணவன் தன்னை விட்டுச் சென்றத்திலிருந்து மூன்றுப் பிள்ளைகளையும் தனி ஆளாக வளர்த்து வந்தாள். முதல் குழந்தை ஜெஸ்ஸி, இரண்டாவது மகன் ஜேசு மைக்கேல், மூன்றாவது மகன் ராயப்பன் ஆவார். தன்னுடைய மூன்றுக் குழந்தைகளுடன் தனித்து விடப்பட்டாள் அந்தோணியம்மாள். வேறு வழி இல்லாமல் பாதிரியாரிடம் தஞ்சம் அடைந்தாள். பாதிரியாரின் சின்ன சின்ன உதவிகளோடு குடும்பத்தினை நடத்தினாள். பின்பு பாதிரியாருடன் தொடர்பு இருப்பதாக ஊரில் உள்ள அனைவரும் தவறாகப் பேசுயதைத் தன்னுடைய மகள் தன்னிடம் கூறியதைக் கேட்டு மனமுடைந்து சண்டையிடுகிறாள்.

“அடியே…ஊரு ஆயிரம் பேசும்டி அதுகாக
நம்ம எதுக்குடி…
வருத்தபடனும்…..
ஓலய முடிய வச்சலும் ஊர் வாய மூடவ முடியும்….”

(சோ. தர்மன், பதிமூனாவது மையவாடி, ப. 90)

என்று சொல்லி அந்தோணியம்மாள் ஜெஸ்ஸியிடம் அழுதுப் புலம்புவதாக புதினம் பதிவுசெய்கிறது.

ஜெஸ்ஸி

அந்தோணியம்மாளின் மூத்த மகள் ஆவாள். அறியாத வயதிலேயே தன் தந்தை வியாகப்பன் தங்களை விட்டு பிரிந்து வேறு பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார். இதனால் தன் அம்மா தன்னையும் தம்பிகளையும் வளர்க்க முடியாமல் படும் துயரங்களையும் கண்டு வளர்கிறாள். அதன் காரணமாக அம்மாவின் மீது அதிகமான பாசமும் நம்பிக்கையும் உள்ளவர்களாகவும் விளக்குகிறாள். பருவமற்ற குறைந்த நாளிலேயே சர்ச் உபயதேசியாரின் மகன் வின்சென்டுடன் ஒடிப் போய் ஒரு மாதம் கழித்து வீடு திரும்பினாள். ஜெஸ்ஸி திரும்பிய போது அவள் அம்மா எதுவும் கூறாமல் அமைதியாக ஏற்றுக்கொண்டாள். அதன் பிறகு ஊர் முழுவதும் பல்வேறு விதமாக ஜெஸ்ஸியேப் பற்றிப் பேசினார்கள். அதனை அவள் ஒரு போதும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஜெஸ்ஸி மிகுந்த பிடிவாதக் காரியாக இருந்தாள். தான் என்ன நினைத்தாலும் அதனைச் செய்து முடிக்கும் எண்ணம் அவளுக்கு எப்போதும் இருந்தது. ஜெஸ்ஸியின் தந்தை வியாகப்பன் உடல்நிலையினை சரியில்லாத போதும், இறந்த பிறகும் கூட பார்க்கச் செல்லவில்லை. பாதிரியார் தொடர்பினைச் சுட்டிக்காட்டி அந்தோணியம்மாளுடன் சண்டையிட்டு பஞ்சுமில் வேலைக்கு போக ஆரம்பித்தாள். அங்கு ரிக்ஷா ஓட்டி வரும் ஜெயபால் என்பவரைக் காதலித்து வருவதாகவும் அவனைத் திருமணம் செய்துகொள்ள விருப்பம் என்றும் அந்தோணியம்மாளிடம் கூறினாள். அம்மாவின் எதிர்ப்பினை மீறி இந்து மத முறைப்படி திருமணம் செய்து கொள்வதாக புதினம் பதிவுசெய்துள்ளது.

புஷ்பம் சிஸ்டர்

புஷ்பம் கிறிஸ்துவ குடும்ப பெண்ணாக இருந்தாலும் கன்னியாஸ்திரி ஆக அவளுக்கு விருப்பம் இல்லை. அவள் குடும்பத்தினருக்கும் விருப்பமில்லை. புஷ்பத்தின் அக்கா லூர்து மேரி திருமணம் முடிந்து சில ஆண்டுகள் கழித்து பிரசவத்திற்காக வந்திருந்த போது புஷ்பம் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். தன் அக்காவின் குழந்தையை எடுத்து கொஞ்சி விளையாட போகிறோம் என்ற மகிழ்ச்சியில் துள்ளி குதித்து திரிந்தாள். பிரசவ வலியில் அக்கா லூர்தும், வயிற்றில் இருந்த குழந்தையும் இறந்ததாக செய்தி வந்தது. இதனை கேட்ட புஷ்பம் மனமுடைந்து போகிறாள். கனத்த இதயத்துடன் பைபிளை எடுத்து வாசிக்கிறாள்,

> **“காற்றைப் பார்ப்பவன் விதைக்கமாட்டன்.**
>
> **மேகத்தைப் பார்ப்பவன் அறுவடை செய்யமாட்டான்”. (மேலது., ப. 159)**

மரண பயம் அவளை ஒட்டிக் கொள்ளவும், புஷ்பம் அக்காவின் மரணம் நிலைகுத்திய திறந்த விழிகள் அவளை விட்டு விலக்கவில்லை. பயத்தினால் தாம்பத்தியமே வேண்டாம் என்று கன்னியாஸ்திரியாக மாறியவள் புஷ்பம்.

ரேஷ்மா சிஸ்டர்

ரேஷ்மா சிஸ்டர் பார்ப்பதற்கு சிகப்பாகவும் ஒல்லியாகவும் இருப்பாள். குறைந்த

வயதிலேயே கன்னியாஸ்திரியாக மடத்திற்கு வந்தவள். கன்னியாஸ்திரிகள் தங்கும் இடத்திற்கு வார்டனாக வந்து ஏழெட்டு மாதம்தான் இருக்கும். நல்ல மனநிலையில் தான் இருந்தார். ஆனால் இங்குள்ள கன்னியாஸ்திரிகள் அனைவரும் சேர்ந்து அவருக்கு பைத்தியம் என்று கூறிவிட்டார்கள். தனி அறையில் ரேஷ்மா சிஸ்டரைப் பூட்டி வைத்தனர். ஒவ்வொரு நாளும் ரேஷ்மாவின் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ரேஷ்மாவுக்கு பைத்தியம் முத்து விட்டது என்று வெங்கடாசலபுரம் அந்தோணியார் கோவிலில் கொண்டு போய் விட்டு வந்தனர்.

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள்

அதிகார வர்க்கத்தினை சேர்ந்த ஆண்கள் சிலர் தங்களின் கீழ்த்தரமான ஆசைகளுக்காக பெண்களை தவறாக பயன்படுத்திக் கொள்கின்றனர். மதம் என்னும் போர்வையில் கடவுள் பற்றி எடுத்துக் கூறும் பாதிரியார்கள் தங்களை காண வரும் பெண்களை தவறாக பயன்படுத்தி அவர்களை பணத்தின் மூலம் சரிக் கட்டி விடுகின்றனர் என்பதை புதினம் அறியப்படுத்துகிறது.

பெண்களின் எழுச்சி

ரேஷ்மா சிஸ்டர் மடத்தில் நடக்கும் அவலங்களையும், கன்னியாஸ்திரிகள், பாதிரியார்களின் தவறான போக்குகளைக் கண்டிப்பதால் அவளை ரீட்டா சிஸ்டர் பைத்தியம் என்ற பட்டத்தினை கொடுத்து கன்னியாஸ்திரிகளின் மடத்திலிருந்து வெளியேற்றிவிட்டு, மனநலம் பாதிக்கப்பட்ட மருத்துவமனையில் அவளை விட்டு செல்கின்றனர். பின்னர் ஓரிரு நாட்களில் தற்கொலை செய்து கொள்கிறாள்.

ஏஞ்சல் சிஸ்டர் ரீட்டாவின் கொடுமையான புத்தியில் பாதிக்கப்பட்டு, மடங்களில் நடக்கும் அவலநிலை கண்டு துறவறம் தனக்கு வேண்டாம் என்று கூறி அங்கிருந்து கருத்தமுத்து வேலை செய்யும் தோனித்துறைக்கு சென்று அங்கிருக்கும் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறாள்.

ஜெஸ்ஸி சிறுவயது முதல் பல வகையான துன்பங்கள் அனுபவித்து வந்தாலும் தன் அம்மாவின் தவறான போக்கினை எடுத்துக் கூறி அம்மாவின் எதிர்ப்பினையும் மீறி ஜெயபாலைத் திருமணம் செய்து கொள்கிறாள். பாதிரியாரல் தான் தனது குடும்பம் இந்த நிலைக்கு ஆளானது என்று பாதிரியாரே நேரடியாக எதிர்ப்பதாக புதினம் எடுத்துரைக்கிறது.

முடிவுரை

புதினங்களில் படைக்கப்பட்டுள்ள பெண்கள் ஓரிரு இடங்களில் அடங்கியிருந்தாலும் தங்களின் மீது வன்முறைகள் அதிகமாகும் போது அவர்கள் எரிமலை போல் பொங்கி எழுந்து தங்களின் எதிர்ப்பையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்திக் கொள்கின்றனர். பெண்கள் இறப்பு முதல் பிறப்பு வரை பல இன்னல்களை சந்திக்க வேண்டியுள்ளது. அதுவும் அதிகார வர்க்கத்தின் கீழ் இருக்கும் பெண்கள் ஆண்களின் பல்வேறு நிலைகளில் அடிபணிய வேண்டி உள்ளது என படைப்பாளர் புதினத்தின் வழி கூறுகின்றார்.

துணைநூற்பட்டியல்

1. தர்மன், சோ., 2020. **பதிமூனாவது மையவாடி**, முதற்பதிப்பு. சென்னை. அடையாளம் வெளியீடு.
2. முத்துச்சிதம்பரம், ச., 2010. **பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்**, முதற்பதிப்பு. பாளையங்கோட்டை. சுபம் சீனிவாஸ் சுப்ரீம்.
3. ...., **நாலடியார் மூலமும் உரையும்**, புலியூர்க்கேசிகன் (உரை), சென்னை. சாரதா பதிப்பகம்.

Reference

1. Tharman, So., 2020. **Pathimoonavathu maiyavadi**, First Edition. Chennai. Identity Publication.
2. Muthuchithambaram, S., 2010. **Feminism Origin and Development**, First Edition. Palayankottai. Subam Srinivas Supreme.
3. ...., **Naladiyar Moolamum Urayum**, Puliyurkesikan (Text), Chennai. Saratha Publishing House.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

அந்தோணி ராஜா.வே, "பதிமூனாவது மையவாடி புதினத்தில் பெண்களின் நிலை " புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 4, அக்டோபர் 2025, பக். 1-7

Cite this Article in English

Antony Raja. V, "The status of women in the thirteenth Maiyavadi novel" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 3, October 2025, pp. 1-7

பொம்மை மனிதர்கள் சிறுகதை தொகுப்பில் சமூக வாழ்வியல்

Social life in the Pommai Manithargal Short Story Collection

பெரியசாமி.பீ, தமிழ்த்துறை, டாக்டர்எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி, ஆரணி, திருவண்ணாமலை- 632317, தமிழ்நாடு, இந்தியா,

Periyaswamy. B, Department of Tamil, Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317, Tamil Nadu, India,

ORCID : https://orcid.org/0000-0002-7395-9699

DOI: 10.5281/zenodo.17417915

Abstract

This essay titled 'Social Life' in the collection of Pommai Manithargal Short Stories examines in detail the poverty of the people in the modern society, the sense of motherhood, the plight of the elderly in the society, the fact that food is based on the land and facilities to which they belong, the importance of education and the suffering of the mother. The collection also explores how a woman lifts her hand whenever a man is tired of her life. In this way, this collection of short stories by Mugilai Rajapandian has been shown to be a mirror of today's social life. The short story collection Puppet People contains twelve short stories by Mughali Rajapandian. Every short story covers every social point of view. The short stories in this book contain various messages like Kumaraswamy's honesty, Sorna's bravery, Kuppamma's son's affection, Vasanthi's good mind, division, necessity of study, secularism. Based on these, the social life involved in it will be explored.

ஆய்வுச் சுருக்கம்

பொம்மை மனிதர்கள் சிறுகதை தொகுப்பில் சமூக வாழ்வியல் எனும் இக்கட்டுரையானது தற்கால சமூகத்தில் மக்களின் வறுமை நிலையையும், தாய்மை உணர்வையும், வயது மூத்தோர்கள் சமூகத்தில் அடையும் அவலத்தையும், உணவு என்பது அவரவர் சார்ந்துள்ள நிலத்தின் அடிப்படையிலும் வசதிவாய்ப்புகளின் அடிப்படையிலும் அமைந்துள்ளது என்பதையும் கல்வியின் முக்கியத்துவமும் அதற்காக தாய் படும் துயரையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்ந்துள்ளது. அதுமட்டுமன்றி ஒரு ஆண் தன் வாழ்வில் சோர்ந்து போகும்போதெல்லாம் பெண் அவனின் கைதூக்கி எவ்வாறு கரையேற்றுகிறாள் என்பதும் இச்சிறுகதை தொகுப்பின் வழி ஆராயப்பட்டுள்ளது. இதன்வழி முகிலை இராசபாண்டியனின் இச்சிறுகதை தொகுப்பானது இன்றைய

சமூக அவலங்களைப் படம்பிடிக்கும் கண்ணாடியாகத் திகழ்ந்துள்ளதை இக்கட்டுரை வெளிப்படுத்தியுள்ளது.

Keywords : Puppet Men, Mukhilai Rajapandian, Lifestyle, Society, Femininity, Education, பொம்மை மனிதர்கள், முகிலை இராசபாண்டியன், வாழ்வியல், சமூகம், பெண்மை, கல்வி

முன்னுரை

பொம்மை மனிதர்கள் எனும் சிறுகதை தொகுப்பு முகிலை இராசபாண்டியன் அவர்களின் பன்னிரண்டு சிறுகதைகளை உள்ளக்கியது. ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு சமூகப் பார்வையினை உள்ளடக்கியது. குமாரசாமியின் நேர்மை, சொர்ணாவின் துணிவு, குப்பம்மாவின் மகன் பாசம், வசந்தியின் நல்ல மனம், பாகப்பிரிவினை, படிப்பின் அவசியம், மதசார்பின்மை எனப் பல்வேறு செய்திகளை உள்ளடக்கியதாக இதிலுள்ள சிறுகதைகள் அமைந்துள்ளன. இவற்றினை அடிப்படையாகக் கொண்டு இதில் இடம்பெற்றுள்ள சமூக வாழ்வியலை ஆராயவுள்ளது.

பெண்மை – வழிகாட்டி

ஒரு குடும்பம் சிறப்பாக இருக்க வேண்டும் என்றால் அதில் இருக்கும் பெண்கள் சிறப்பானவர்களாக இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தைக் கட்டியாள்வதே பெண்தான். இதனை, **வாழ்வில் சீரும் சிறப்பும் பெற்று வாழ ஒரு சமூகமானது நல்ல குடும்ப வாழ்க்கை உடையதாக இருக்க வேண்டும். அதற்கு முக்கியமான கருவியாக இருப்பவர்கள் பெண்கள். ஒருவன் பிறர் மதிக்கும் வகையில் பெருமையுடன் வாழ்ந்து மகத்தான சிறந்த குணங்களை உடையவனாக இருக்க வேண்டும். அத்தகைய உயர்ந்த குணங்களை உடையவனாக ஒருவனை உருவாக்குவது அவனுடைய மனைவியாகிய பெண் என்பவள் ஆவாள். பெண் வாழ்வின் உயர்ந்த இன்பத்தை வழங்குவதை அடிப்படை இலட்சியமாகத் மேற்கொள்கிறாள். (கோ. வசந்திமாலா, பெண்மையைப் போற்றுவோம், பதிவுகள் இணைய இதழ், 27 செப்டம்பர் 2020, பார்வை – 01.10.2025) என வசந்திமாலா கூறியுள்ளார்.**

பெண் என்பவள் ஆணின் பாதி. ஓர் ஆண் துவட்டு விழும்போதெல்லாம் தூக்கி நிறுத்தும் ஊன்றுகோல். கணவனுக்கான சிறந்த வழிகாட்டி. இதனை, குமாரசாமியின் தந்தை இறந்த பின் நிற்கதியாய் நின்றவனுக்கு வழிகாட்டியான அவன் மனைவி, **கைலாசம் இருந்தது வரையில் குமாரசாமிக்கு உலகமே தெரியவில்லை. தந்தையார் இறந்த பிறகு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்த குமாரசாமிக்குச் சொர்ணாதான் நல்ல வழியைக் காட்டினாள். (பொம்மை மனிதர்கள், ப.22)** என்பதிலிருந்தும்,

“செஞ்சு வச்சு பொம்மைகளைப் பார்த்துக் கிட்டு நின்னா போதாது படைச்சதைப் பார்த்துப் பிரம்மா பிரமிச்சுப் போய் நின்னுட்டா படைப்பு வேலையைச் செய்யறது எப்படி?” (பொம்மை மனிதர்கள், ப.24) என்று அவனை அதிகார தோணியில் உற்சாகப்படுத்தும் சொர்ணாவின் குரலிலும், இன்று மீன் போதுமானவரை கிடைக்காவிட்டால் என்ன செய்வது எனத் தவிக்கும் சூசைக்கு துணையாய் நிற்கும் மேரியிடனும், **”இந்தா சித்த இரும். அந்த உமலை நான் எடுத்துட்டு வர்றேன்” என்றபடி வெளியே வந்த மேரி உமலை எடுத்துக் கொண்டு சூசையுடன் நடந்தாள். (பொம்மை மனிதர்கள், ப.103)** பணத்தை சரியாக கையாள வேண்டும் என எடுத்துரைக்கும் மேரியிடமும், **இன்னைக்கு வேணும் நாளைக்கு வேணும்னு பணத்தைச் சேர்த்து வைச்சிருந்தா இந்தக் கஷ்ட காலத்துக்கு உதவியா இருக்கும். அப்படியில்லாம தினமும் வர்றபணத்தைச் செலவு செய்யறதால எப்படிச் சமாளிக்கிறதுன்னு தெரியாம திண்டாட வேண்டியிருக்கிறது. (பொம்மை மனிதர்கள், ப.108)** மரவாடகை தராததால் இன்னாசி தாத்தா மரத்தை எடுத்துச் சென்றபோதும் மனம் தளராமல், **‘கவலைப்பட்டுக்கொண்டு இருப்பதால் நமது கஷ்டம் நம்மை விட்டுப் போய்விடாது. அந்தக் கவலையை விரட்டுவதற்கு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும். ஒரு வாசல் அடைக்கப் பட்டுவிட்டால் ஆண்டவர் இன்னொரு வாசலைத் திறப்பார். அந்த வாசல் முதல் வாசலை விட உன்னதமாகவே இருக்கும்’ எப்போதோ ஆலயத்தில் கேட்ட பிரசங்கம் மேரியின் நினைவில் ஓடியது. (பொம்மை மனிதர்கள், ப.114)** உடனே அவள் தன் கழுத்திலிருந்ததைக் கழட்டி கொடுத்து தொழில் செய்ய உதவியனாள். பெண் என்பவள் ஆளுமையின் அடையாளம் பாசத்தின் உச்சம் என்பதை நம்மால் அறிய இயலுகிறது.

உணவு

உணவு என்பது ஒரு இனத்தின் பண்பாட்டு அடையாளங்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. பெரும்பாலும் அந்தந்த பகுதிக்கும் அவரவர் வசதிக்கும் ஏற்ப இந்த உணவுகள் மாறுபடும். இந்த உணவு குறித்த ஆய்வுகள் பன்நெடுங்காலமாய் நடந்துவருவதையும் உணவையும் பண்பாடும் பிரிக்க இயலாதவை என்பதையும், **மனித வரலாறு குறித்த விவாதத்தில் உணவினைப் புறந்தள்ளிவிட இயலாது. உலகளவில் நடைபெறக்கூடிய மானிடவியல் சார்ந்த ஆய்வுகளில் உணவு குறித்த பகுப்பாய்வுகள் பல தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. காரணம், உணவின் பயன்பாடு மனித வாழ்வியலோடு தொடர்புடைய உயிர்க்காரணியாகும். (ஆ. பிரபு, உணவும் பண்பாட்டு மெருகேற்றலும், வல்லினம் கலை இலக்கிய இதழ், 9 மார்ச். 2017, பார்வை-25.09.2025)** என்கிறார் பிரபு. எல்லா உணவைக் காட்டிலும் தாய் தன் கையால் உருவாக்கும் உணவே சிறந்தது என்பதை பழமலய்,

‘எளியது தான்

என்றாலும் அம்மா வைக்கும் குழம்பு

உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பது (பழமலய், சனங்களின் கதை, ப.,50)

எனும் கவிதையில் கூறியுள்ளார். அந்தவகையில் பொம்மை செய்யும் குமாரசாமிக்கு இட்லி காலை உணவாக அமைந்தது. இதனை,

இட்லியைச் சாப்பிட்ட அவன் எதுவும் பேசாமல் பொம்மைகளையே பார்த்து நின்றான். (பொம்மை மனிதர்கள், ப.24)

என்பதிலிருந்து அறியலாம். மேலும், வறுமையின் பிடியில் சிக்குண்டு தோல் தொழிற்சாலையில் வேலைபார்க்கும் குப்பம்மாவுக்கு,

பக்கத்தில் இருந்த சுள்ளிகளை ஒடித்து அடுப்பில் தீ மூட்டினாள். கருப்பட்டி டப்பாவின் மூலையில் ஒட்டியிருந்த தூளை எல்லாம் வழித்து சுக்குப் போட்டு காபி போட்டாள். ஒரு தம்ளர் சுக்குக் காபியைத் தெளித்துக் குடித்தாள். தொண்டையில் அது இறங்னும்போதே சுறுசுறுப்பு உடம்பில் ஏற ஆரம்பித்தது. பானையில் கிடந்த குருணை அரிசியைச் சலித்து அடுப்பில் போட்டு கஞ்சி வைத்தாள். கஞ்சி கொதித்து வேகின்ற வேளையில் ஒரு டப்பா சோற்றை எடுத்து நீரை வடித்தாள். அதை அப்படியே பாஸ்கரின் டிபன் பாக்ஸில் வைத்து மூடினாள். மீதி இருந்த பருக்கையில் மேலும் வெந்நீரை ஊற்றினாள். கொதித்துக் காய்ந்தது கஞ்சி. பாஸ்கரின் அருகில் போனாள் குப்பம்மா. தூங்கும் மகனை உற்றுப் பார்த்தாள். அவனது முகத்தில் பக்கியிருந்த சோகம் அவள் நெஞ்சைப் பிசைந்தது. (பொம்மை மனிதர்கள், ப.35)

சுக்குக் காபியும், கஞ்சியும் உணவாக அமைந்தது. மீன்பிடிக்கும் சூசைக்கு பழைய சோறும் கருவாடும் உணவாக அமைந்தது. இதனை,

பழைய சோறு அவனுக்குத் தயாராக இருந்தது. வாளைமீன் கருவாட்டைத் தொட்டு பழைய சோற்றைச் சாப்பிட்டுவிட்டு எழுந்தான் சூசை. (பொம்மை மனிதர்கள், ப.103)

என்பதிலிருந்து அறியலாம். இதன்வழி பல்வேறுபட்ட மக்களின் உணவுப் பாரம்பரியத்தை இந்நூலாசிரியர் நமக்கு எடுத்துள்ளமை அறியப்படுகின்றது.

வேலியே பயிரை மேய்ந்த்து

சென்னைக்கு வந்து தன் பொம்மைகளை விற்க குமாரசாமியும் அவன் மனைவி சொர்ணாவும் தொடங்கினர். அப்போது அந்த பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த பட்டாமி என்ற காவலருக்கு சொர்ணாவை அடைய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அவனுடைய செய்கைகளை எல்லாம் வைத்து சொர்ணாவும் ஓரளவு புரிந்துக் கொண்டாள். அதனால் அவனை விட்டு தள்ளியே இருந்து வந்தாள். ஒருநாள் தண்ணீர் கேட்டு வந்தவன்,

தண்ணீரை வாங்கிய பட்டாபி அவளது கைகளைப் பற்றினார். கையை இழுத்துக் கொண்டாள் சொர்ணா. தம்ளர் தரையில் விழுந்தது. தம்ளரை எடுக்கக் குனிந்தாள் அவள். சொர்ணாவின் முழங்கைப் பகுதியைப் பிடித்து அவர் பக்கமாக இழுத்தார் பட்டாபி. அவரது மூச்சு சூடாக வெளிவந்தது. சொர்ணாவுக்குக் கோபம் அதிகமானது. பட்டாபியின் கன்னத்தில் ஒங்கி அடித்தாள். (பொம்மை மனிதர்கள், பக்.27-28)

உடனே அவன் இனி எப்படி இங்க கடை நடத்தரேனு பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பினான். இது அன்று மட்டுமல்ல இன்றும் நடந்த வண்ணம் தான் இருந்து வருகின்றது. காவலர் காவலர்களாக இல்லாமல் அவர்களே பாதகர்களாக மாறுவதுதான் நம் சமூகத்தின் சாபக்கேடு. பல சிறை மரணங்கள், பழிவாங்கல் நடவடிக்கைகள், கற்பழிப்புகள், கட்டபஞ்சாயத்துக்கள் எனக் காவலர்களின் நடத்தைக்கேடுகள் ஏராளம் இதை நாம் தினமும் செய்தித்தாள்களிலும் செய்திகளிலும் கண்டு வருகின்றோம்.

பட்டாபி எல்லாவற்றிற்கும் மேலாக தன் அதிகாரத்திமிரை காட்டும் முகமாக,

அவரது நடையில் ஒரு கம்பீரம். நிமிர்ந்து நடந்து வந்தார். பொம்மைகளை லத்தியால் தட்டியபடி “இன்னைக்குச் சாயங்காலத்துக்குள்ளே இங்கே இருந்து எல்லாம் காலி பண்ணிடணும்... நாளைக்குக் காலையில் இங்கே மினிஸ்டர் வர்றார்... எல்லாம் எடுத்துக் கட்டிக்கோ...” என்று லத்தியால் பொம்மையைச் சரித்த பட்டாபியின் கண்கள் சொர்ணாவைத் தேடின. (பொம்மை மனிதர்கள், ப.29)

அவர்களை அந்த இடத்திலிருந்து விரட்ட முயற்சி செய்கிறார். இது தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவது மட்டுமல்ல. தனக்கு அடக்காதவர்களை அழிக்க வேண்டும் என்ற ஒருவகை அதிகாரப்போக்குமாகும்.

தாய் மனம்

தாய் என்பவள் தனக்கு இல்லையென்றாலும் தன் மக்களை குறையின்றி வளர்க் வேண்டும் என்று விரும்பக்கூடியவள். இதனை,

அன்றாடம் குடிப்பதற்குக் கஞ்சியே இல்லாத நிலை. என்றாலும் தனது மகனைப் பெரிய படிப்பு படிக்க வைத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவளுக்கு. (பொம்மை மனிதர்கள், பக்.32-33) எனக் குப்பாமாவைப் பற்றி ஆசிரியர் கூறியுள்ளார். இது போல ஒரு குப்பம்மா அல்ல பல்வேறு குப்பம்மாக்கள் தினந்தோறும் நம்மைக் கடந்து செல்கிறார்கள். நமக்குத்தான் அவர்களைப் பற்றி சிந்திக்க நேரம் இருப்பதில்லை. தன் உடல்நிலை சரியில்லாத போதும் தனது சூப்பர்வைசரிடம் கேட்டு தன் மகனுக்கான பணத்தை தயார் படுத்தி வந்த குப்பம்மா தன் மகனிடம்,

”ஒண்ணும் இல்லேய்யா... நீ இஸ்கூலு பொறப்படு... இந்தா பீஸ் கட்ட

பணம்... போற பாதையில தங்கம் கடையில இட்லி வாங்கிச் சாப்பிட்டுட்டுப் போ... காசு நான் அப்புறம் கொடுக்கிறேன்" என்று நடுங்கியபடியே சொன்னாள் குப்பம்மா. (பொம்மை மனிதர்கள், ப.43)

எந்த காரணத்தைக் கொண்டும் தன் மகன் படிப்பு கெட்டுப்போகக் கூடாது என்பதில் குப்பம்மா எவ்வளவு உறுதியாக இருந்தாள் என்பது நமக்கு இதிலிருந்து தெரிகின்றது.

இப்படியெல்லாம் கஷ்டபட்டு படிக்க வைக்கும் தாயை கடைசி காலத்தில் பிள்ளைகள் சரியாகப் பார்த்துக் கொள்வதில்லை என்பதை தந்தை இறந்த பின் சொத்துக்களைப் பிரித்துக் கொண்டு போகவும் அம்மாவை யார் பார்த்துக் கொள்வது என விவாதிக்கவும் வந்த பிள்ளைகளைக் கண்டு வருந்தியவர் கூறுகையில்,

"நீங்கெல்லாம் படிச்சவங்கதானா.. உங்களைப் பெத்து வளர்த்து படிக்கவைச்சு ஆளாக்கிறதுக்கு அவள் எவ்வளவு கஷ்டப்பட்டா... உங்ககிட்ட எதையாவது எதிர்பார்த்தா அதைச் செய்தா... உங்கமேல உள்ள பாசத்திலதான் அதைச் செய்தாள். அந்தப் பாசத்தைப் புரிஞ்சிக்காம பணக்கணக்குப் போடுறீங்களே... இதுக்குத்தானா... நீங்க படிச்சீங்க... நீங்கள்லாம் மனுஷங்களே இல்லைடா... மிருகங்க... போங்க... போய்ப் பாருங்க... உங்க... அம்மா யார் தயவும் வேணாம்னு போயிருக்கிறா! போய்க் கடையில பாரு...!" (பொம்மை மனிதர்கள், ப.69)

என்றதும் கடைசியில் தாய் வேலை பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து பிள்ளைகள் திகைக்கின்றனர். ஆம், பெற்றோர்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது கருணையும் பணமும் அல்ல. பந்தமும் பாசமும் தான் அதுதான் அவர்களை கடைசி காலத்திலும் சுகமாக வாழ வைக்கும். வாங்க வீட்டுக்குப் போகலாம் எனத் தாயிடம் கூறும் மகன்களிடம்,

"அதைத்தான் வித்தாச்சே... அங்கே இனி என்ன இருக்கு... உங்க வேலை முடிஞ்சு போச்சு... நீங்க போய்ட்டு வாங்க..." என்று சொன்ன அம்மாவின் கண்களில் கண்ணீர் வழிந்தது. (பொம்மை மனிதர்கள், ப.70)

இவ்வாறு தன் வேதனையைப் புலப்படுத்துகிறாள். என்னதான் கோடிகோடியாய் சொத்தும் பணமும் இருந்தாலும் தன் கடைசி காலத்தை தான் வாழ்ந்த வீட்டில் கழிக்க வேண்டும். பரம்பரை வீட்டில் வாழ வேண்டும் என்பது உளவியல் ரீதியாக உணர்வு. அதற்கு நாம் ஒவ்வொருவரும் மதிப்பளிக்க வேண்டும். இல்லையென்றால் அதைவிட்டு சென்ற பொழுதே அவர்கள் உயிரும் போனதுதான். அங்கிருந்து புறப்படுவது அவர்களின் உடலாகத்தான் இருக்கும் உணர்வுள்ள மனிதராய் இருக்க இயலாது என்பதை நாம் புரிந்து கொண்டு முதியோர்களை அவர்கள் விருப்படி வாழ வைக்க வேண்டும்.

நேர்மை

நேர்மை என்பது ஒரு மனித இச்சமூகத்தில் சிறந்தவனாய் அடையாளம் காட்டும்

பண்புகளும் சிறந்தது. இதனை வள்ளுவர்,

இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்

நடுக்கற்ற காட்சி யவர். (குறள்.115)

என்ற குறளில், இடர்பாடுகள் வந்தாலும் தகுதியற்ற செயல்களைச் செய்யாத, நடுவு நிலைமை உடையவர்கள் நேர்மையானவர்கள் அவர்கள் தங்கள் வாழ்வில் வெற்றி பெறுவார்கள்என் கூறியுள்ளார். அவ்வாறே, ஒரு கிருஷ்ணர் பொம்மையை ஒரு பெரிய பணக்காரர் குமாரசாமியிடம் செய்ய சொல்லி இருந்தார். அது அவர் எதிர்பார்த்ததை விட மிகவும் அழகாக இருந்தது. அதனால் அவருக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. அதனால் அவர்,

முன்பு பேசியதற்கு மேலாக இரண்டு நூறு ரூபாய் நோட்டுகளை அதிகமாகக் கொடுக்க அவர் எடுத்தார். குமாரசாமி வாங்கவில்லை. “ஆயிரம் ரூபாயே அதிகம்தான்” என்று சொல்லி ஆயிரம் ரூபாயை மட்டும் பெற்றுக்கொண்டான். “இந்தப் பொம்மை விலையை ஐயாயிரம் ரூபாய்னு நீ சொன்னாலும் நான் நம்பித்தான் வாங்குவேன். இந்த இருநூறு ரூபாயை வேண்டாம்னு சொல்றியே!” “தொழிலுக்கேத்த பணம் தாங்க வாங்கணும். இந்தப் பொம்மையை ஐயாயிரம் ரூபாய்னு பொய் சொல்லி உங்களை நான் ஏமாத்திடலாங்க... ஆனா, ஐயாயிரத்துக்குப் பத்தாயிரமா என்னை ஏமாத்த ஒருத்தன இருப்பான். உழைக்காத காசு உடல்ல ஒட்டாதுங்க. உங்களை நான் ஏமாத்திப் பணம் வாங்கினேன்னா அந்த ராதாகிஷ்ணனே என்னை மன்னிக்க மாட்டாருங்க...”(பொம்மை மனிதர்கள், ப.20)

என்று குமாரசாமி கூறி பேசிய தொகையை மட்டும் பெற்றுக்கொண்டார். இதிலிருந்து அவருடைய நேர்மை நமக்குப் புலப்படுகின்றது. இதைதான் வறுமையிலும் நேர்மை என்பர். இதேபோல், சங்கரன் பனைமரத்தில் பதனீர் மட்டுமே கட்டுவார் கள்ளு இறக்கமாட்டார். இதனை,

யாராவது பனையில் கள்ளுக் கலயம் கட்டச் சொன்னால் அவர்களுக்குச் சங்கரன் சொல்லும் ஒரே பதில் இதுதான்; ‘பத்திரகாளி அம்மன் நமக்காகத் தந்த இந்தப் பனை, பதனீர் இறக்குறதுக்குத்தான்; கள்ளுப்பயினி இறக்குறதுக்கு இல்லை’ என்று வானத்தைக் காட்டுவார். (பொம்மை மனிதர்கள், ப.160) என்பதிலிருந்து அவரின் நேர்மையை நாம் அறிந்து கொள்ளலாம்.

மதசார்பின்மை

மதம் என்பது யானைக்குதான் பிடிக்க வேண்டும். மனிதர்களுக்கு அல்ல. மனிதனுக்கு மனிதநேயம்தான் பிடிக்க வேண்டும். ஏனோ இப்போதெல்லாம் சமூகத்தில் மதமில்லை என்று சொல்லிக்கொண்டு மத அரசியலும் சாதி இல்லை என்று சொல்லிக்

கொண்டு சாதி அரசியலும் மலிவாக நடந்து வருகின்றன. இந்த அரசியல் தலைவர்களுக்கு மதமும் சாதியும் தவிர வேறேதும் தெரியாதோ என்னமோ. மனிதனை மனிதனாக வாழவிடுங்கள். உலகில் மனிதநேயம் தழைக்கும். எங்களை உங்கள் ஓட்டுக்காகவும் அரசியலுக்காகவும் பிரிக்க முயலாதீர்கள் மனிதம் மரணித்துவிடும். மனிதநேயம் என்பது மதத்தைக் கடந்தது என்பதை பொம்மை மனிதர்கள் எனும் சிறுகதையில், பொம்மை செய்பவரான குமாரசாமி செய்து வைத்திருந்த பொம்மைகளை விவரிக்கும்போது,

யானை, மான், குதிரை பொம்மைகளுடன் முருகன் தொடங்கி இயேசு நாதர் வரை எல்லா மதக்கடவுள்களும் அந்த வெயிலில் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். (பொம்மை மனிதர்கள், ப.15) என முகிலை இராசபாண்டியன் கூறியிருப்பது ஒரு சிறந்த சமூக நல்லிணக்க பார்வையாகும். இதன் தேவையை,

மதச்சார்பின்மை எனும் அரசியல் மாண்பு சகல நாடுகளுக்கும் தேவையானது என்றால், பல மதத்தவரைக் கொண்ட இந்தியாவிற்கு அது அவசியத்திலும் அவசியமானது. மதச்சார்பும், மதவெறியும் கொண்ட நிலப்பிரபுத்துவ அரசியலினால் நம் நாடு எத்தனையோ துன்பங்களை அனுபவித்து விட்டது. இன்றைய உலகமய அரசியலில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியனின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்க வேண்டும் என்றால் சகல மக்களின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய ஒரு மெய்யான பொருளாதார வளர்ச்சியை நாம் கண்டாக வேண்டும். அதற்கு மதக் கலவரங்கள் இல்லாத, ஒற்றுமை மிகுந்த சமூகம் என்பது ஒரு முன்தேவையாகும். அதைச் சாதிக்க அரசிலும் பொதுவாழ்விலும் மதச்சார்பின்மையைச் சொல்லளவிலும் செயலளவிலும் உருவாக்குவதே ஒரே வழி. (அருணன், மதச்சார்பின்மை எனும் அரசியல் மாண்பு, கீற்று இணைய இதழ், 09 மார்ச். 2011, பார்வை – 01.10.2025)

என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மதமாய்ச் சில மனிதர்கள் எனும் சிறுகதையில், தன்னை தாக்க வந்தவர்களிடமிருந்து தப்பித்து தேவசகாயத்திடம் அடைக்கலம் புகுந்த சாமியாடி சங்கரன்,

தேவசகாயத்தின் கைகளைப் பிடித்துக்கொண்டு சொன்னார்... "அந்தச் சுடலைமாடசாமிதான் உங்க ரூபத்தில் வந்து என்னைக் காப்பாத்தினாரு..." என்று வானத்தைப் பார்த்தார். (பொம்மை மனிதர்கள், ப.160)

இது ஒரு கிருத்துவரை சுடலைமாடனாக நினைக்க வைத்திருக்கிறது இச்சமூகம் என்றால் அது மதசார்பின்மையின் அடையாளமே. எனவே, மனிதத்தை வளர்ப்போம் மதங்களைக் கடந்து. மதங்கள் கூறுவதெல்லாம் பிற உயிர்களையும் தம் உயிர்போல் நேசி என்பதையே. எனவே உயிர்களை நேசிப்போம் உறவுகளாய் வாழ்வோம்

முடிவுரை

சமூகம் என்பது தனி ஆளாய் வாழ்வதல்ல. அது பல மனிதர்களின், பல குடும்பங்களின் கூட்டமைப்பு. எனவே, அது பலதரப்பட்ட உணர்வுகளை உள்ளடக்கிது. இதில் நாம், நேர்மையான மனிதர்கள், அதிகாரத்திமிருடன் இருப்பவர்கள், வறுமையில் வாடுபவர்கள், பணக்காரர்கள், கல்விக்காக கையேந்துபவர்கள், உணவுக்காக உழல்பவர்கள் எனப் பலரையும் நாம் பார்க்கிறோம். அவர்களைப் பற்றிய ஒரு கதைகளின் தொகுப்பாகத்தான் இது அமைந்துள்ளது. மேலும், பெண் என்பவள் ஆணின் வழிகாட்டி. அவள் தாயாகவும், மனைவியாகவும் இச்சமூகத்தில் ஆண்களுக்கு எவ்வாறு பக்க பலமாய் உள்ளாள் என்பதையும் இக்கதைத் தொகுப்பு நமக்கு எடுத்துரைக்கின்றது. ஒரு ஆணின் வளர்ச்சி அடிப்படை காரணி பெண்தான் என்பதை இக்கதைத் தொகுப்பிலுள்ள கதைகள் நமக்குத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. வயதான காலத்தில் இன்றை இளைஞர்கள் அந்த தாயை எவ்வாறு நடத்துகிறார்கள் என்ற கொடுமையும் இதில் படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது. இதன்வழி இக்கதைத் தொகுப்பு தற்காலச் சமூகத்தின் கண்ணாடியாகத் திகழ்கின்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

துணைநூற்பட்டியல்

1. அருணன், மதச்சார்பின்மை எனும் அரசியல் மாண்பு, கீற்று இணைய இதழ், 09 மார்ச். 2011, பார்வை – 01.10.2025 https://keetru.com/
2. பழமலய், சனங்களின் கதை, பெருமிதம் வெளியீடு, 1985.
3. பிரபு. ஆ., உணவும் பண்பாட்டு மெருகேற்றலும், வல்லினம் கலை இலக்கிய இதழ், 9 மார்ச். 2017, பார்வை - 25.09.2025 https://vallinam.com.my/version2/?p=3853
4. புலியூர்கேசிகன் (பதி.), திருக்குறள் பரிமேலழகர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1986.
5. முகிலை இராசபாண்டியன், பொம்மை மனிதர்கள், கோவன் பதிப்பகம், சென்னை, 2007.
6. வசந்திமாலா. கோ., பெண்மையைப் போற்றுவோம், பதிவுகள் இணைய இதழ், 27 செப்டம்பர் 2020, பார்வை – 01.10.2025 https://www.geotamil.com/

Bibliography

1. Arunan, Madhasarbinmai enum arasiyal manbu, Keetru E. journal, Published- 09 March. 2011, Visited – 01.09.2025. https://keetru.com/
2. Pazhamalai, Sanangalin kathai, Perumitham Veliyedu, 1985.

3. Prabhu. A., Unavum Panpattu Meruketralum, Vallinam Art and Literature Journal, published - 9 March. 2017, Visited - 25.09.2025 https://vallinam.com.my/version2/?p=3853

4. Puliyur Kesikan (ed.), Thirukkural Parimelazhagar Urai, Poompuhar Pathipagam, Chennai, 1986.

5. Mukhilai Rajapandian, Bommai Manithargal, Kovan Pathipagam, Chennai, 2007.

6. Vasanthimala. K., Penmaiyai Potruvom, Pathivugal e.journal, Published -27 September 2020, Visited – 15.09.2025 https://www.geotamil.com/

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

பெரியசாமி.பீ, "பொம்மை மனிதர்கள் சிறுகதை தொகுப்பில் சமூக வாழ்வியல்" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 4, அக்டோபர் 2025, பக். 8-17

Cite this Article in English

Periyaswamy. B, "Social life in the Pommai Manithargal Short Story Collection" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 4, October 2025, pp. 8-17

தமிழர் எண் கணித முறையுடன் வள்ளுவரின் கணிதம் சார்ந்த சிந்தனை

Valluvar's Mathematical Thinking with Tamil Numerology

விஜயராகவன். க, தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5, தமிழ்நாடு, இந்தியா.

Vijayaragavan G, Department of Tamil, SONA College of Arts and Science, Salem-5, Tamil Nadu, India.

ORCiD : https://orcid.org/0009-0002-9262-2204

DOI: 10.5281/zenodo.17417958

Abstract

Valluvam is a book on life. Valluvar taught life to the society. Innumerable literatures on life may have appeared in the Tamil language. Innumerable ideas on human life may have been given by poets, writers, and essayists. However, Valluvar has given a book that is suitable for all times and people of all times. The list of philosophy, linguistics, science, spiritual thought, basic principles of genetics, politics, etc., is a long one, explaining the actions of the entire human race. In today's context, it is necessary to identify them. This study takes the form of a research paper that provides the Tamil world with knowledge about the numerical principles that are linked to the letters of those elements.

ஆய்வுச்சுருக்கம்

வள்ளுவம் வாழ்வியலுக்கான நூல். வள்ளுவர் வாழ்வியலை சமுதாயத்திற்கு கற்றுத் தந்தவர். எண்ணற்ற வாழ்வியலுக்கான இலக்கியங்கள் தமிழ்மொழியில் தோன்றி இருக்கலாம். மானுட வாழ்வியலுக்கான எண்ணற்ற கருத்துக்களை புலவர்களும், கவிஞர்களும், உரையாசிரியர்களும் தந்திருக்கலாம். எனினும் எக்காலத்திற்கும் எக்காலத்தவர்கும் பொருந்தி நிற்கும் வகையில் ஒரு நூலை தந்திருக்கிறார் வள்ளுவர். மெய்யியல், மொழியியல், அறிவியல், ஆன்மீக சிந்தனை, பிறப்பியல் சார்ந்த அடிப்படை நிலை, அரசியல் என நீளும் பட்டியல் ஒட்டுமொத்த மனித குலத்தின் செயல் விளக்கமாய் விரிந்து நிற்கிறது. இன்றைய சூழலில் அவற்றை அடையாளம் காண வேண்டியதும் அவசியமாகிறது. அந்த கூறுகளில் எழுத்தியளுடன் பிணைந்திருக்கும் எண்ணியலைப் பற்றி தமிழ்சார் உலகு அறியும் வண்ணம் ஆய்ந்து ஆய்வுலகிற்கு அளிக்கும் ஒரு ஆய்வுக்கட்டுரையாக வடிவம் பெறுகிறது இந்த ஆய்வு.

Keywords : Life, Science, Arithmetic, Statistics, Writing, Numerology, Numerals,

வாழ்வியல், அறிவியல், எண்கணிதம், எண் குறியீடு, எழுத்து, எண்ணியல், எண்ணுபெயர்கள்.

முன்னுரை

அறிவியல் என்பது ஒரு துறை. வாழ்வியல் இயக்கத்திற்குத் துணை நிற்பது. ‘அறிவியல்’ என்னும் சொல் பழந்தமிழ் நூல்களில் இல்லை. இந்த நூற்றாண்டில் உருவான சொல் அறிவியல். ஆங்கிலத்தின் 'Science' என்பதற்கு ஆக்கப்பெற்ற சொல். விஞ்ஞானம் என்பது வடசொல். தமிழில் 'அறிவியல்' என்னும் சொல் முற்கால நூல்களில் இல்லாமையால் அறிவியற் கருத்துக்கள் தமிழில் இல்லை என்று ஆகாது. தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் பல அறிவியற் கருத்துக்களைக் காண முடிகின்றது. திருவள்ளுவத்தில் அறிவியற் கருத்துக்கள் செறிந்துள்ளன. அறிவியல், கணக்கியல், மருத்துவம், இயற்பியல், தாவரவியல், விலங்கியல், வேளாண்மை, மேலாண்மை அறிவியல், பொதுவானவை என பல்வேறு அறிவியல் கூறுகள் உள்ளடங்கிய நூலைப் படைத்துள்ளார்.

எண் கணித அறிவியல் சிந்தனை

பழங்காலம் தொட்டே அறிவியலில் தெளிவு பெற்று விளங்கினர் நம் முன்னோர். அறிவியல் என்பது பல்வேறு கூர்களை உள்ளடக்கியது. அதில் கணிதமும் ஒன்று. காலத்தை, நேரத்தை என கணிக்கத் தொடங்கிய அவர்களது எண்ணியல் சார்ந்த அறிவு தற்காலத்தில் தோன்றும் அறிவியலுக்கான விதையாக இருந்துள்ளது. அயல்நாடுகளில் எண்ணியல் சார்ந்த கல்வியல் முறை நடைமுறையில் உள்ளது.

‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’

எனும் ஔவையின் வரிகள் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. இளம் பருவத்திலேயே எழுத்தியல் திறனும், கணித அறிவும் நன்கு கைவரப் பெறுதல் வாழ்வியலுக்கான தலையாய அடிப்படைகள் ஆகும். ஏந்த பொருளையும் விரைவாகவும் துல்லியமாகவும் அறிந்து கொள்ள இவ்விரு ஆற்றல்களும் கை கொடுக்கும். எனவே இளமைப் பருவத்திலிருந்தே எழுத்தியல் திறனையும், கணித அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த கல்வியறிவு அவசியமானது. கணிதவியல் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஆராய்வதற்கு மிகுந்த இடம் உள்ளது. எழுத்துக்களால் அறியப்பெறுவது இலக்கியம் எனில், எண்களால் அறியப்பெறுவது கணிதம் ஆகும்.

கோட்டுக் கணக்கு முறை

எண்ணுப்பெயர்கள் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர் எண் குறியீடுகள் பற்றிக் குறிப்பிடவில்லை. 30 எழுத்துக்களால் உணர்த்தப்படும் தமிழ்மொழியைப் பற்றித்

தொல்காப்பியம் பேசுகிறது. எண் குறியீடு இந்த 30 எழுத்துக்களுக்கு அப்பாற்பட்டது.

"வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற

நாளொற்றித் தேய்ந்த விரல்" குறள். 1261

கணவன் பொருள்தேடிவரச் செல்கிறான். மனைவி அவன் சென்று எத்தனை நாள் ஆயிற்று என அறிய ஒவ்வொரு நாளும் விடிந்தெழுந்தவுடன் சுவரில் தனித்தனிக் கோடுபோட்டு வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோட்டையும் விரலால் தொட்டு எண்ணிப்பார்க்கிறாள். என திருக்குறள் ஒன்று கணக்கியலை குறித்துக் காட்டுகிறது. மதுரைக் கணக்காயனார் போன்ற புலவர்களும், மதுரை வேளாசான், முக்கால் ஆசான் நல்வெள்ளையார், மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார், மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார், மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார், மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார், மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் என 'ஆசிரியர்' எனச் சிறப்பிக்கப்பட்டுள்ள புலவர்களும் எண்-கணக்கைக் கற்பித்துவந்த சங்ககாலப் புலவர்கள்.

பண்டைய எண் குறியீடு முறை

தமிழரின் எண் குறியீடு எப்படி இருந்தது என்பதைக் காட்டும் செய்தி 13-ஆம் நூற்றாண்டு ஒட்டக்கூத்தன், புகழேந்தி ஆகிய புலவர் காலத்து ஔவையார் பாடலில் உள்ளது.

"எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே

மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்

கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே

ஆரையடா சொன்னாயடா" - ஔவை. தனி. 11

அவர் 'அவலட்சணமே' என்னும் சொல்லால் ஒருவனைத் திட்டும்போது 'எட்டேகால் லட்சணமே' என்று திட்டுகிறார். தமிழில் 'அ' என்பது எண் 8-ஐக் குறிக்கும் 'வ' என்பது 1/4-ஐக் குறிக்கும். 8, 1/4 இரண்டையும் சேர்த்தால் 'அவ' என வரும். எனவே எட்டேகால் லட்சணம் என்பது அவலட்சணம் என்னும் பொருளை உணர்த்தும். ஒன்று என்னும் முழுமையைப் பின்னோக்கிப் பகுக்கும்போது தமிழர்கள் இரண்டு வகையான பாகுபாடுகளைக் கடைப்பிடித்துள்ளனர்.

பண்டைதமிழர் கணக்கில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். எண்ணிலி (infinity)-யை குறிக்க 'கந்தழி' என்ற சொல்லையும், ஆயிரம் கோடியை குறிக்க 'கும்பம்' என்ற சொல்லையும் பயன்படுத்தினர்.

மிக நுண்ணிய அளவைகளைக் கையாண்ட பண்டைய தமிழர்கள்

எண்ணிலளவைக்கும், நீட்டளவைக்கும் கீழ்வாய் சிற்றிலக்க வாய்பாடுகள் தயாரித்ததை தேவநேயன் அவர்களின் பண்டை தமிழக நாகரீகமும் பண்பாடும் என்ற நூலில் விவரித்துள்ளார். அவற்றிலிருந்து ஒரு மேல் முந்திரி = 1/320 எனவும் கீழ் முந்திரி =1/102400 எனவும் அறிகின்றோம். ஒரு 'தேர்த்துகள்' என்பது மிகமிகச் சிறிய எண் எனவும் அறிகின்றோம். நீட்டலளவை வாய்பாடு அணுவிலிருந்து தொடங்கி ஒரு காதம் வரை வெவ்வேறு பெயரகளால் வழங்கப் பெற்றது. இதனால் அந்த காலத்து அரசுகள் நிலத்தை துல்லியமாக அளந்து அதற்கேற்றாற் போல் வரி வசூலித்தனர்.

மேல் வாயிலக்கப் பேரெண்களை குறிக்க தொல்காப்பியர் ஒரு சூத்திரமே அளித்துள்ளார். அம்பல் என வரூஉம் இறுதி அல் பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும் எனப் பல கோடிகளை குறிக்கும் பேரெண்களை குறிப்பால் உணர்த்துகிறார். தாமரை, குவளை, என்பன 'ஐ' ஈறும் 'சொல்லின் கடைசியில்', கணிகம், சங்கம், வெள்ளம் என்பன.'அம்' ஈறும் ஆம்பல் என்பது பல் ஈறும், நெய்தல் என்பது 'அல்' ஈறும் உடைய சொற்கள்.

- கும்பம் - ஆயிரம் கோடி 1000,0000000
- கணிகம் - பத்தாயிரம் கோடி (11 சுழியம்)
- தாமரை - கோடாகோடி (14 சுழியம்)
- சங்கம் - பத்து கோடாகோடி
- வாரணம் - நூறு கோடாகோடி
- பரதம் - இலட்சம் கோடாகோடி (1பின் 24சுழியங்களை கொண்டது.)

பரிபாடலில் கீரந்தையார்,

"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்
மையில் கமலமும் வெள்ளமும்"

என வெளிப்படையாக பேரெண்களை குறிக்கிறார். இலக்கம் லட்சம் என்ற எண். நூறாயிரம் என்ற சொல்லால் குறிக்கப்பட்டு வந்தது. மேலும், சிற்றிலக்கத்திற்கு பேரிலக்கத்திற்கும் பெருக்கல் வாய்பாடு இருந்தது. சதுர வாய்பாடும் இருந்தது. பண்டை கால தமிழகத்தில் குழிக்கணக்கு என இதை குறிப்பிட்டு வந்தனர். குழித்தல் என்றால் சதுரித்தல் என்று பெயர். ஒரு எண்ணை அவ்வெண்ணை கொண்டே பெருக்குதல் 'சதுரித்தல்' எனப்படும்.

சிற்றிலக்கக் குழிப்பைச் சிறுகுழி எனவும் பேரிலக்க குழிப்பை பெருங்குழியெனவும் தனித்தனியே குறித்தும் வந்திருக்கின்றனர். காக்கைப் பாடினியார் என்ற பெண்பால் புலவர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தவர்

"வட்டத்தரை கொண்டு விட்டத்தரை தாக்கின்

சட்டென தெரியும் குழி"

என்ற பாடல் மூலம் எளிதாக கூறி விடுகிறார். அதாவது சுற்றளவில் பாதியும் வட்டத்து அரை வட்டத்தின் பாதியும் ஆரம் பெருக்க பரப்பு குழி கிடைக்கும். தனிப்பாடல்கள் சிலவும் கணித சொற்களை உள்ளடக்கி இருந்துள்ளது என்று அறிகின்றோம். காஞ்சியில் வரதராஜர் யானை வாகனத்தில் வீற்றிருந்து உலா வருகிறார் அவ்வழகை கண்டு மயங்கிய ஒரு நங்கையின் அரையாடை நழுவி கீழே விழுந்ததாம். என காளமேகப் புலவர் பாடுகிறார்.

"எட்டொருமா வெண்காணிமீதே இருந்த கலைப்

பட்டொருமா நான்மாவிற் பாய்ததே சிட்டர் தொழும்

தேவாதி தேவன் திருவத்தியூர் வரதன்

மாவேறி வீதிவர கண்டு"

இப்பாடலில் ஒரு மா, காணி, எட்டு மா, எண் காணி, நான்மா என்ற கணிதச் சொற்களை திறம்பட கையாண்ட நயம் பாராட்டதக்கது.

பகுப்புப் பெயர்கள்

ஒன்றிற்குப் பின்னே உள்ள எண்களைப் பின்னம் என்கிறோம். பின்னே உள்ளது பின்னம். தொல்காப்பியர் அரை, கால் முதலான பின்ன எண்கள் ஒன்றரை என்பது போல் முழுஎண்ணோடு புணர்வதையும், காலே அரைக்கால் என்பது போல் பின்னத்தோடு பின்னம் புணர்வதையும் குறிப்பிடுகிறார்.

ஒன்று என்னும் முழுமையை இரண்டு இரண்டாகப் பகுத்துக்கொண்டு செல்லும் முறை. இதை பழந்தமிழர் கணக்கீட்டு முறையாக அறிகிறோம்.

- அரை –1/2
- கால் – 1/4
- அரைக்கால் – 1/8
- வீசம் (அல்லது) மாகாணி – 1/16
- அரைவீசம் – 1/32
- கால்வீசம் – 1/64
- அரைக்கால்வீசம் – 1/128

எனப் பின்னத்தின் பெயரும் குறியீடும் அமையும். ஒன்று என்னும் முழுமையை முதலில்

ஐந்தாகப் பகுத்து அதன் பின்னத்தை இரண்டிரண்டாகப் பகுத்துக்கொண்டு சொல்லும் முறைமையையும் பின்பர்ரியுல்லத்தை காண முடிகிறது.

- நான்மா - 1/5
- இருமா - 1/10
- ஒருமா – 1/20
- அரைமா – 1/40
- காணி – 1/80
- அரைக்காணி – 1/160
- முந்திரி – 1/320

எனப் பின்னத்தின் பெயர்கள் அமையும்.

எண்ணும் எழுத்தும்

“எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு” **- குறள். 392**

எண் என்று சொல்லப்படுவன எடுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர் அறிஞர். அந்த வகையில் திருக்குறளில் ஆங்காங்கே எண்ணியல் கணித சார்ந்த அறிவியல் சிந்தனைகளை அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஒன்று (29 இடங்களில்), இரண்டு (16 இடங்களில்), மூன்று (10 இடங்களில்), நான்கு (09 இடங்களில்), ஐந்து (11 இடங்களில்), ஆறு (01 இடங்களில்), ஏழு (08 இடங்களில்), எட்டு (01 இடங்களில்), பத்து (01 இடங்களில்), நூறு (01 இடங்களில்), ஆயிரம் (01 இடங்களில்), கோடி (08 இடங்களில்) எனும் எண்ணுபெயர்களை வள்ளுவர் தனது நூலில் சுட்டியிருக்கின்றார்.

வள்ளுவரின் எண்ணியல் அறிவும் பயன்பாட்டு முறையும்

- ஒன்று - 109, 156, 259, 397, 398, 400, 454, 609, 661, 773, 835, 836, 838, 871, 875, 932, 974, 1023, 1026, 1052, 1095, II46, 1196, 1197, 1202, 1266, 1269, 1274, 1275
- இரண்டு - 19, 392, 393, 402, 455, 581, 662, 674, 760, 875, 920, 992, 1022, 1108, 1196, 1247.
- மூன்று - 41, 360, 383, 589, 682, 684, 688, 941, 952, 1085

- நான்கு - 35, 382, 501, 513, 605, 743, 766, 950, 953
- ஐந்து - 24, 27, 43, 271, 343, 632, 675, 738, 939, 983, 1101
- ஆறு - 381
- ஏழு - 62, 107, 126, 398, 538, 835, 1269, 1278
- எட்டு - 09
- ஒன்பது - இந்த எண் முறையை வள்ளுவர் குரலில் எங்கும் சுட்டவில்லை.
- பத்து - 450
- நூறு - 932
- ஆயிரம் - 259
- கோடி - 337, 377, 639, 816, 817, 954, 1005, 1061

ஒன்று எனும் எண்ணுப்பெயர்

எண்களின் வரிசையில் முதலில் வருவது ஒன்று. வள்ளுவர் ஒன்று என்ற எண்ணைப் இருபத்தி எட்டு குறட்பாக்களில் கையாண்டு கருத்துக்களைப் புலப்படுத்தியுள்ளார். அவற்றுள் இன்றியதையாத ஒரிரு இடங்களை இங்கே சுட்டிக் காட்டலாம்.

“கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன்று உள்ளக் கெடும்” - குறள். 109

என்பது ‘செய்ந்நன்றி அறிதல்’ என்ற அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பா. இதில் ஒன்று என்ற எண்ணைச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். மேளம் சில குறட்பாக்களில்,

“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை. - குறள். 400

“குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும். - குறள். 609

“ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு. - குறள். 835

“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று” - குறள். 1146

போன்ற குறள்களில் வள்ளுவர் ஒன்று எனும் என்ணுபெயரை ஒரு, ஓர், ஒருவற்கு, ஒருமை, ஒன்றென் எனும் சொற்களால் குறித்து எண்ணை வள்ளுவர் திறம்படக்

கையாண்டுள்ளார்.

தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்

வானம் வழங்கா தெனின். - குறள். 19

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்

நல்லாற்றின் நின்ற துணை. - குறள். 41

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம். - குறள். 35

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது. - குறள். 24

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்

உடையான் அரசருள் ஏறு. - குறள். 381

எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்

பண்புடை மக்கட் பெறின். - குறள். 62

கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை. - குறள். 09

இவ்வாறு குறளில் வள்ளுவர் ஒன்று முதல் எட்டு வரையிலான எண்ணுபெயர்களை ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். இது அவரது எண்ணியல் சார்ந்த கணிதத் திறனை உலகிற்கு உணர்த்துவதை அறிய முடிகிறது. மேலும், இதேபோன்று பத்து, நூறு, ஆயிரம், கோடி எனும் எண்ணுபெயர்களை தனது நூலில் திறம்பட பயன்படுத்தியிருக்கின்றார், அவை பின்வருமாறு அறியப்படுகிறது.

பத்து எனும் எண்ணுப்பெயர்

“வல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே

நல்லார் தொடர்கை விடல்” - குறள். 450

திருவள்ளுவர் சான்றோர்க்குத் தரும் மதிப்பு பெரியது. நல்லார், தக்கார், இடிக்கும் துணையார், அறன் அறிந்து மூத்த அறிவுடையார் என்றெல்லாம் பொருள் பொதிந்த தொடர்களால் அவர்களுக்கு மதிப்பளித்து சுட்டுகிறார். வள்ளுவரின் கருத்தில் நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் என்பது பலருடையத தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமை பயப்பதாகும்.

நூறு எனும் எண்ணுப்பெயர்

“ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்

நன்றுஎய்தி வாழ்ந்தோர் ஆறு" - குறள்.932

நூறு என்னும் எண்களைத் தொடர்புபடுத்தித் தம் கருத்தினைத் திறம்பட எடுத்துரைத்துள்ளார் வள்ளுவர். திருவள்ளுவர் இக்குறட்பாவில் சூதாட்டத்தில் பெறும் பொருள் ஒரு மடங்கு இருக்கும் ஆனால் சூதாடிகள் ஆட்டத்தின் முடிவில் இழப்பதோ நூறு மடங்காக அமையும் என வாழ்வியலுக்கு ஒவ்வாத நிலையை தெளிவுபட கூறுகிறார்.

ஆயிரம் எனும் எண்ணுப்பெயர்

"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று" - குறள். 259

புலால் மறுத்தல் – மற்றோர் உயிரின் உடம்பை உண்ணாமை – வள்ளுவர் உயிரெனப் போற்றும் கொள்கைகளுள் ஒன்று. அதன் இன்றியமையாமையைப் புலப்படுத்தும் இடத்தில் அவர் ஆயிரம் என்ற எண்ணைத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அவரது கருத்தில் 'நெய் முதலிய உணவுப் பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலை விட ஒரு விலங்கின் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது ஆகும்.'

கோடி எனும் எண்ணுப்பெயர்

திருவள்ளுவருக்குக் கோடி என்ற பேரெண் மீது ஒரு தனி ஈர்ப்பு உள்ளது. அவர் அதனை எட்டுக் குறள்களில் கையாண்டுள்ளார். ஒரு கோடியை மட்டுமின்றி பத்து கோடி, எழுபது கோடி என்று அதன் விவரிக்க எண்களையும் அவர் இரண்டு குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" - குறள். 377
"நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்" - குறள். 817

போன்ற குறட்பாக்களில் கோடி என்ற எண்ணின் பயன்பாட்டு உத்தியை காணலாம். வாழ்வில் தீ நட்பால் விளையும் தாக்கத்தைப் புலப்படுத்தக் கருதும் வள்ளுவர் அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில் நகைக்கும் தன்மை உடையவரின் நட்பை விட பகைவரால் வருவன பத்துக்கோடி மடங்கு நன்மை ஆகும் என்கிறார். இவ்வாறு திருவள்ளுவர் எண்களைப் பயன்படுத்தித் தம் கருத்துக்களை புலப்படுத்தியுள்ளார்.

துணைநூற்பட்டியல்

1. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் (எழுத்து - சொல் – பொருள்), கௌரா

பதிப்பகக் குழுமம், 2017

2. புலியூர் கேசிகன், தொல்காப்பியம், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை, 2014
3. விருச்சிகன் ரவீந்திரநாத், தமிழ் ஒளியில் எண் கணிதம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 2010
4. திருக்குறள் பரிமேலழகர் உரை, கங்கை புத்தக நிலையம், 2005
5. இளங்குமரன் இரா., திருக்குறளில் அறிவியல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2009
6. முனைவர் குமரிச்செழியன், திருக்குறளில் அறிவியல் கருத்துகள், கௌரா பதிப்பகம், 2016

Referances

1. Ilampoorananar's text, Tolkappiyam (Word - Word - Meaning), Kaura Publishing Group, 2017
2. Puliyur Keshikan, Tolkappiyam, Tamil Development Department, Chennai, 2014
3. Viruchikan Rabindranath, Numerology in Tamil Light, Sri Senpaka Publishing House, 2010
4. Thirukkural Parimelazhagar's text, Gangai Bookstore, 2005
5. Ilangumaran I.R., Science in Thirukkural, Meenakshi Bookstore, Madurai, 2009
6. Dr. Kumarichezhiyan, Scientific Concepts in Thirukkural, Kaura Publishing House, 2016

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

விஜயராகவன். க, "தமிழர் எண் கணித முறையுடன் வள்ளுவரின் கணிதம் சார்ந்த சிந்தனை" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 4, அக்டோபர் 2025, பக். 18-27

Cite this Article in English

Vijayaragavan G, "Valluvar's Mathematical Thinking with Tamil Numerology" Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 4, October 2025, pp. 18-27

தெருக்கூத்து நிகழ்த்து வெளியில் கதைகள்

Stories in the TheruKoothu Performance Area

வெங்கடேஷ். பெ, தமிழ்த்துறை, இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 28

Venkadesh. P, Department of Tamil, Hindusthan Arts and Science College,

Coimbatore - 28

DOI: 10.5281/zenodo.17417979

Abstract

TheruKoothu stories have been divided into Banvalsar stories and Banvalsarar stories. The stories appearing in the books published by P. Ratnanayakar and Sons as Banvalsarar stories; and the stories that are told by the performers through hearing and learning orally and through observation have been studied.

It can be seen that the Bharatakathas in the Terukkuttu panuvals are based on the panuvals of Perunthevanar, Villiputhurar and Nallapillai. From these original panuvals, the Puranas are divided into one part, one branch in one part, one branch in one section, and one branch in one branch. In the creation of TheruKoothu panuvals, the verses belong to Villiputhurar and Perunthevanar, while the songs, poems, and kandharthams are written and performed by trained instrumentalists.

In the Theru Koothu performance area, mostly traditional stories are performed as Koothu. Koothu stories are found with and without Puranamsar. This article examines whether the stories found in street stories are presented as mythological stories and non-mythological stories (novels).

ஆய்வுச் சுருக்கம்

தெருக்கூத்துக் கதைகள் பனுவல்சார் கதை, பனுவல்சாராக் கதையென்று பிரித்து ஆராயப்பட்டுள்ளது. பனுவல்சார் கதைகளாக பி.இரத்தினநாயகர் அண்டு சன்ஸ் என்பார் வெளியிட்டுள்ள நூல்களில் இடம்பெறும் கதைகளும்;, பனுவல்சாராக் கதைகளாக வாத்தியார்கள் சொல்ல அதைச் செவிவழியே கேட்டறிந்து வாய்மொழியாகவும், கண்டுபாவனை வழியாகக் கற்கும் கதைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

தெருக்கூத்துப் பனுவல்களில் பாரதக்கதைகளானது பெருந்தேவனார், வில்லிப்புத்தூரார், நல்லாப்பிள்ளை ஆகியோரின் பனுவல்களை மூலப்பனுவல்களாகக்

கொண்டு அமைந்துள்ளதை அறியமுடிகின்றது. அம்மூலப் பனுவல்களிருந்து புராணத்தில் ஒருபகுதி, பகுதியில் ஒருபிரிவு, பிரிவில் ஒருகிளை, கிளையில் ஒருகன்னி எனப் பிரித்து நிகழ்த்தப்படுகிறது. தெருக்கூத்துப் பனுவல் உருவாக்கத்தில் வசனத்திற்கு வில்லிப்புத்தூரார், பெருந்தேவனார் ஆகியோருடையதாகவும் பாட்டு, கவி, கந்தார்த்தம் போன்றவை பயிற்சியுடைய வாத்தியார்களாலும் எழுதப்பெற்று நிகழ்த்துவெளிகளில் காணப்படுகின்றன.

தெருக்கூத்து நிகழ்த்து வெளியில் பெரும்பாலும் பழமரபுக் கதைகளே கூத்துக்களாக நிகழ்த்தப்படுகின்றன. கூத்துக் கதைகளானவை புராணச்சார்போடும், புராணச் சார்பற்றும் காணப்படுகின்றன. தெருக்கூத்துக் கதைகளுள் காணப்படுகின்ற கதைகளானது புராணக் கதைகளாகவும் புராணம் சாராக் (நாவல்ஸ்) கதைகளாகவும் நிகழ்த்தப்படுகின்றன என்பதைப்பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

Keywords: Fantasy story – Descriptive stories – General mythology – Caste-related stories – Non-mythological stories – Mythological stories – Mythological stories – Novels.
கற்பனைக் கதை – சித்தரிப்புக் கதைகள் - பொதுப்புராணம் - சாதிசார்ந்தக் கதைகள் - புராணம் சாராக் கதைகள் - புராணம் சார் கதைகள் - தொன்மக் கதைகள் - புதுக்கதைகள் (நாவல்கள்).

தெருக்கூத்துப் பனுவல்கள்

தெரு+க்கூத்துப் பனுவல்கள் பெரும்பான்மையாக பாரதம் சார்ந்த கதைப்பனுவல்களாகவே காணப்படுகின்றன. அவை பாரத மூலப்பனுவளுள் இருந்து புராணத்தில் ஒரு பகுதி, பகுதியில் ஒரு பிரிவு, பிரிவில் ஒரு கிளை, கிளையில் ஒரு கன்னி என பிரித்து நிகழ்த்தப்படுகின்றன. “பாரதத்தின் மூலங்களைத் தமிழ் சமூகங்களுக்கேற்றவாறு மூவர் கதைப்பொருளாக்கியுள்ளனர். பெருந்தேவனார் தொடங்கி வில்லிப்புத்தூரார், நல்லாப்பிள்ளை ஆகியோர் பாரதத்தை தமிழ்வடிவில் பனுவலாக்கியுள்ளனர். நல்லாப்பிள்ளை என்பவர் மட்டும் பாரதக் கதையினை முழுப்பதிப்பாக்கினார். பெருந்தேவனார் முதல் எட்டு பருவங்களையும், வில்லிபுத்தூரார் பதினான்கு பருவங்களையும் கிடைக்கின்றது. இந்தக் குறைபாட்டினைத் தீர்க்கும் பொருட்டுக் கள ஆய்வின் மூலமாகவும் வாழ்க்கைச் சடங்குகள் ஈறாகவும் துணைகொண்டு நல்லாப் பிள்ளை பாரதத்தை மட்டும் முழு பதிப்பாக்கி இருக்கின்றார். இவர் தமிழ்நாட்டின் மாந்தர்களுக்கேற்றவாரான பாங்கில் பாரதத்தைப் பதிப்பித்திருக்கின்றார். தமிழர்களின் உணவு, உடை, கற்பு, கலாச்சாரம், உபசரிப்பு, அடைகாத்தல் போன்ற மரபிற் கேற்றவாராகவும் இந்நூலினைப் பதிப்பித்திருக்கின்றார். இத்தகைய சிறப்பிடம் பெற்று விளங்குகின்ற மகாபாரத நூலே தமிழ்நாட்டிற்கெல்லாம் ஆவணமாகத் திகழ்ந்து வருகின்றது” (மு. சண்முகம், தமிழ்நாட்டில் பாரதம், ப.95)

என்னும் கருத்து சிந்தித்தற்குரியது. மூலப்பனுவலிலிருந்து தமிழ்ச் சமுகத்திற்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்ட பெருந்தேவனார், வில்லிப்புத்துாரார், நல்லாப் பிள்ளை ஆகியோரின் பனுவல்கள் தெருக்கூத்திற்கான மூலப்பனுவலாக அமைவதை அறியமுடிகின்றது.

புராணம் சாராமல் மக்களிடையே காணப்படுகின்ற பல்வேறு தொன்மக் கதைகளும் "மகாபாரத மூல நூலைத் தவிர கிளை நூல்களும் வழிபாட்டு நூல்களும் இவற்றினையே முன்மொழிந்திருக்கின்றன. கூத்து நூல்களும் புனைகதைகளின் கருப்பொருளும் பாரத நூலினையே முதன்மைப்படுத்தி வருகின்றன. பாரதப் பிரசங்கிகள் அனைவருக்கும் நல்லாப் பிள்ளையின் பாரத நூலே முழுமையான தரவாக அமைந்திருக்கின்றது" (மு. சண்முகம், தமிழ்நாட்டில் பாரதம், ப.95) என்ற மு.சண்முகம் அவர்களின் கருத்தின் அடிப்படையில் தமிழகத்தில் உருப்பெறுகின்ற புராணம் சாராக் கதைகளும் பாரதக் கதைகளோடு திரிபு ஏற்பட்டு நிகழ்த்துவெளிவழி நிகழ்த்தப்பட்டு பனுவலாக்கப்படுகின்றன.

தொன்மக் கதைகள் பல தெருக்கூத்து நிகழ்த்துவெளியில் பாரதக் கதையோடுத் திரிபு ஏற்படாமல் மக்களின் வாழ்வியலோடு இணைந்த அளவில் கதைகள் காணப்படுகின்றன. அவை நல்லதங்காள் கதை, பொன்னர் சங்கர் கதை, மதுரைவீரன், மாற்றாந்தாய் கொடுமை, கூலிக்குத் தாலி கட்டிய கதை, ஒட்ட நாடகம் போன்ற கதைகள் புராணத் திரிபில்லாமல் நாட்டுப்புற மக்களின் வாய்மொழிக் கதைகளாகவே இன்று வரை நிகழ்த்தப்பட்டுப் பல கதைகள் பனுவலாக்கப்பட்டும் உள்ளன.

தெருக்கூத்துப் பனுவல் உருவாக்கம்

தெருக்கூத்துக் கதைகள் நிகழ்த்தப்படுவதற்குக் கையெழுத்துப் பிரதிகள், நூல்கள் என பல வகைமைகளில் நிகழ்த்து வெளியில் பனுவல்கள் காணப்படுகின்றன. அப்பனுவல்களைப் பல்வேறு கூத்து வாத்தியார்கள் பலவாறு படைத்துள்ளனர். இதனை "தெருக்கூத்து நடிப்பதற்காகப் பல்வேறு நாடகங்கள் எழுதப்பட்டு நூற்றுக்கணக்கில் அச்சிடப்பட்டுள்ளன. தேவனாம்பட்டினம் இராசகோபால் படையாட்சி என்பவர் இருபதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி அச்சிட்டார் என்பதை 1976 – இல் அவரிடம் நிகழ்த்தப்பட்ட உரையாடலின் போது அறிந்து கொள்ள முடிந்தது. இவர் நாடகப் பேராசிரியர் என்று அழைக்கப்பட்டவர். தென்னார்காடு மாவட்டத்தில் அப்போதிருந்த புகழ்பெற்றத் தெருக்கூத்து வாத்தியார்களுள் பலரும் இராசகோபால் படையாட்சியின் சீடர்களாகவோ அவர் எழுதிய கூத்து நூல்களை ஆதாரமாகக் கொண்டு கூத்து நிகழ்த்துபவர்களாகவோ இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சிறந்த ஆசிரியர்களால் எழுதப்பட்டு அச்சிடப்பட்ட அல்லது கையெழுத்தாகவுள்ள பாடத்தை மாற்றம் செய்யாமல் கற்றுத்தேர்ந்து தெருக்கூத்து ஆடப்படுவதுண்டு. அவ்வாறு இல்லாமல் அந்தப் பாடத்தில் சிற்சில மாற்றங்களைச் செய்து கொள்வதும் முந்தைய

பாடல்களை அடியொற்றிப் புதிதாகப் பாடல்களை உருவாக்கிக் கொள்வதும் உண்டு. கூத்துக் கற்றுத்தரும் கூத்து வாத்தியார் பாடத்தைத் தேர்ந்தெடுக்கும் அல்லது உருவாக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொள்கிறார். வாத்தியார் கற்றுத்தரும் பாடங்களே அன்றி நடிகர்கள் புதிய பாடங்களை உருவாக்கிக் கொள்வதும் உண்டு”(முனைவர் ஆறு.இராமநாதன், நாட்டுப்புறக் கலைகள் - நிகழ்த்துக் கலைகள், ப.244) என்ற இக்கருத்தானது தெருக்கூத்துப் பனுவல் உருவாக்கம் என்பது பெரும்பான்மையாகக் கூத்து வாத்தியார்களாளே உருவாக்கப்படுகின்றது என்பதனை அறிய முடிகின்றது. ஏனெனில் கூத்து வாத்தியார் என்பவர் கூத்தினுடைய அனைத்து இயங்கியலையும் கற்றுணர்ந்தவர். அதனால் கூத்துப் பனுவல்கள் உருவாக்கம் பெறுவதற்கு அவரது கூத்து குறித்த அறிவு மிகவும் துணை புரிவதாக அமைகின்றது.

தெருக்கூத்து வசனத்துக்கென்றே பெயர்பெற்ற வாத்தியார்கள் உள்ளனர். “வசனம் என்றால் வில்லிபுத்தூராா், பெருந்தேவனாா் போன்ற இரண்டு மூன்று பேர் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பாட்டு, கவி, கந்தார்த்தம் எழுதினதெல்லாம் எங்களைப் போன்ற பயிற்சியுடைய வாத்தியார்கள்தான். அதாவது அம்மணி அம்மாள், சூளமுனுசாமி, தேவனாம்பட்டு ராஜகோபால், வில்வரத்து வேலாயுதம், ஆனத்தூர் சீனிவாச படையாச்சி, ரங்கரத்துபுறம் நடேசப்பறையர் என்று இவர்களெல்லாம் எழுதியிருக்கிறார்கள். இவர்களில் அம்மணியம்மாள் பிரதிகள் சிறப்பாக இருக்கும் எனலாம்” (கோ. பழனி, சி. முத்துகந்தன், 2011, தெருக்கூத்துக் கலைஞர்கள் களஞ்சியம், ப.173) என்பதிலிருந்து வசனத்தினால் பெயர்பெற்ற வாத்தியார்க்களின் செல்வாக்கினையும் அறிய முடிகின்றது.

தெருக்கூத்து பனுவல்கள்

- பதிப்பு சார் பனுவல்கள்
- பதிப்புசாரா பனுவல்கள்

இவற்றைப் பற்றி விரிவாகக் காண்போம்.

பதிப்பு பனுவல்கள்

பதிப்பு சார் கதைகள் என்பது தெருக்கூத்து நிகழ்த்து வெளியில் மூலக்கதைகளிலிருந்து நிகழ்த்துத் தன்மைக்கு ஏற்றவாறு ஒரு மையக்கருத்தை மட்டும் கொண்டு அவற்றை நிகழ்த்தியும், நிகழ்த்தாமல் நிகழ்த்துவதற்கு முன்பாக அச்சாக்கம் பெற்ற கதைகலாகும். தமிழக நிகழ்த்து வெளியில் பி. இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ் என்பார் பல்வேறு நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். வட்டப்பாறையில் வதைக்கப்பட்ட கோவலன் கண்ணகி நாடகம், திருப்பதி வெங்கடேச பெருமாள் நாடகம், அர்ச்சுனண் பாசுபதாஸ்திரம் பெற்ற அர்ச்சுனன் தபசு நாடகம், அர்ச்சுனன் அல்லியை

மாலையிட்ட அல்லி நாடகம், அர்ச்சுனன் பவளக்கொடியை மாலையிட்ட பவளக் கொடி மாலை நாடகம், அபிமன்னன் கலியாணம் என்னும் சுந்தரி மாலையீடு நாடகம், பதின்மூன்றாம் போரென்னும் அபிமன்னன் சண்டை நாடகம், பாரதத்தில் பதினேழாம் போர் என்னும் கர்ண மோட்சம் நாடகம், சிறீ மஹா பாரதத்தில் ஓர் பிரிவாகிய கிருஷ்ணன் தூது நாடகம், அரக்கு மாளிகை நாடகம் போன்ற நாடகங்களைச் சூளை முனிசாமி முதலியார், பாரியாள் அம்மணி அம்மாளிடம் முழு சுதந்திரம் பெற்று இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ் பனுவலாக்கியுள்ளனர்.

இவற்றோடு சக்தி புராணத்தில் ஓர் பாகமாகிய ஸ்ரீ தேவிகருமாரியம்மன் பிறப்பு, கபாலராட்சதன் வதை என்ற நாடகத்தை திருக்கோயிலூர் வட்டம் டி. தேவனூர் கோபால் கவுண்டர் குமாரன் கோ.ஜெயராமன் அவர்களால் எழுதப்பட்டதையும் வளவனூருக்கடுத்த சாலை கிருஷ்ணப்பிள்ளை அவர்களால் இயற்றியதைக் கோகுலாபுரம் - அருணாசல முதலியரால் பார்வையிடப்பட்டு டி.ஆர். வெங்கடேச முதலியாரவர்களிடம் சர்வ சுதந்திரம் பெற்றும், புகழேந்தி புலவர் இயற்றிய பெரிய எழுத்து சித்திராபுத்திர நாயனார் கதையையும், புகழேந்தி புலவர் இயற்றிய பெரிய எழுத்து நல்லதங்காள் கதையையும், பெரிய ஒட்டநாட்டர் நாடக அலங்காரம் நாடகத்தையும் இரத்தின நாயக்கர் அண்ட் சன்ஸ் பனுவலாக்கியுள்ளனர். இப்பனுவல்கள் மட்டுமல்லாமல் பல்வேறு காலக்கட்டங்களில் பல பனுவல்கள் அச்சிடப்பட்டு, தெருக்கூத்துக் கலைஞர்களுக்கு ஒரு கைவிளக்காகப் பயன்பட்டு வருகின்றன.

பதிப்பு சாரா பனுவல்கள்

தெருக்கூத்;தில் பதிப்பு சாராக் கதைகள் என்பது அச்சு பனுவலாகவோ, கையெழுத்துப் பிரதியாகவோ மற்றும் ஓலைச்சுவடியாகவோ அல்லாமல் நிகழ்த்துத் தளத்தில் தெருக்கூத்தாடுநரைப் பார்த்து, “கண்டுபாவனை” வழியாக கதைகளைக் கற்றறிந்து நிகழ்த்துதலே பதிப்புசாராக் கதைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

கள ஆய்வில் தெருக்கூத்து கலைஞர்களிடம் கூத்துப் பிரதிகளை வைத்து தெருக்கூத்து கற்றுக் கொண்டீர்களா என்ற வினாவிற்கு “எனக்கு முன்பு இருந்தவர்களிடமும் இல்லை. எனக்கு பின் வந்தவர்களுக்கும் அப்படி சொல்லித்தரவில்லை. இந்தப் பகுதியில் நாங்கள் கூத்துப்போட்டால், இவன் ஜடையன் வாத்தியார் மெட்டுப்போலவேப் பாடுறான் என்கின்றனர்;. அதாவது, வாய்ப்பாட்டா சொல்லிக்கொடுத்தது தான். புஸ்தகம் எதுவும் கிடையாது. பெரியவர்கள் சொல்லிக்கொடுத்ததை வழிவழியாக நாங்கள் பாடி வருகிறோம்.” (கோ. பழனி, சி. முத்துகந்தன், 2011, தெருக்கூத்துக் கலைஞர்கள் களஞ்சியம், ப.32) என்ற தகவல் அடிப்படையில் பனுவல்கள் துணையின்றி கூத்து வாத்தியார்கள் இளம் கூத்தர்களுக்குக் கூத்துக் கற்றுத்தரும் போது அவர்கள் கூறும் கதையினையே, தொன்றுதொட்டு

நிகழ்த்தி வருகின்றனர் என்ற கருத்தின் அடிப்படையிலும் தெருக்கூத்து வாத்தியார் என்பவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு “வெத்தலப்பாக்கு வாங்கறதும், வேசப்பொட்டி மேல புள்ளையார வெச்சி பூசப் போடறதும், போன வெசயில பேசி மறப்புல படுத்துக்கறதும் வாத்தியாரு தனமில்ல. எனங்கண்டு ஆளுங்க வேசத்தப் பிரிக்கறதும், ஒட்ட வேண்டிய எடத்துல கதய ஒட்டி வெட்ட வேண்டிய எடத்துல வெட்டி கண்ணியமா கதபொருள கொண்டாந்து தாவு சேத்தனும். வேசம் ஒண்ணு வல்லையின்னா தாம் போட்டாடி சந்து அடைக்கனும். சுதி யேத்த எறக்கம், கூத்துலணு எந்தவொரு கொறப்பாடு நேந்தாலும் முந்தியத சரிக்கட்டத் தெரிஞ்சிக்கறதுதான் வாத்தியாருத்தனம். இந்த சாமார்த்தியம் இருக்கறவனெவனோ அவனாலதான் செட்டுக்கு வாத்தியாராக முடியும்” (தவசிக்கருப்புசாமி, அருங்கூத்து, ப.101) கூத்து வாத்தியார்களே பனுவல் சாராமல் வாய்மொழியாகக் கட்டுப்பாடற்ற நிலையில் ஒட்ட வேண்டிய எடத்துல கதய ஒட்டி வெட்ட வேண்டிய எடத்துல வெட்டி கண்ணியக்காம கதபொருளக் கொண்டாந்து தாவு சேத்தனும் என்ற கருத்தின் அடிப்படையிலும் கதையின் நிகழ்த்துதல் உருவாக்கமானது பனுவலன்றி உருப்பெரும் போது வாத்தியார்களே கதையினைச் சூழலுக்குத் தகுந்தவாறு பனுவல் சாராமல் கதைகளை கட்டமைக்கின்றனர்.

19.06.2022 அன்று எலிமேடு மத்தாளக் கலைஞர் அருள் அவர்களிடம் கண்ட நேர்காணலில் கூத்துப்பிரதிகள் ஏதுமின்றி கண்டுபாவனை வழியாகவே கூத்தைக் கற்றுக் கொண்டதாகக் குறிப்பிட்டத் தரவுகளின் வழியே பனுவல் சாராமல் கதைகள் உருவம் பெறுகின்றது என்பதை அறியமுடிகின்றது.

தெருக்கூத்துக் கதைகளின் வகைகள்

தெருக்கூத்துக் கதைகளின் வகைகளை, “தெருக்கூத்துக் கதைகளின் பாடுபொருளாகத் தெய்வ கதைகளே தொண்ணூறு விழுக்காடுகள் அமையக் காணலாம். இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக்கதைகள் பெரும்பான்மையும் இருக்கும். புராணக்கதைகள், பக்தியைப் பாடுபொருளாகக் கொண்ட கதைகள் போல்வன அடுத்த நிலையிலும் கடவுளர் கதைகளாக ஆடரங்கில் காணப்படுகின்றன. ஆடப்படும் இடம், கதைகள் எடுக்கப்பட்ட களம், ஆடுவோரின் கலையறிவு, மக்களின் மனவிருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் தெய்வக்கதைகளை மூன்று வகையாகப் பிரிக்க முடிகிறது. எண்ணிக்கையின் அடிப்படையில் கடவுளர் கதைகளை, 1) இதிகாசக் கதைகள், 2) பக்திக் கதைகள், 3) கலப்புக் கதைகள் என மூன்று வகைகளில் வரிசைப்படுத்தலாம். கதைகளை அவற்றின் பாடுபொருளைக் கருதி, 1)வரலாற்றுக் கதைகள், 2)இனச்சார்புக் கதைகள், 3) புதுமைக் கதைகள் எனப் பகுக்கலாம்” (முனைவர் அ. அறிவுநம்பி, தமிழரின் கூத்தியல், பக்.129,130) என்று தமிழரின் கூத்தியலில் அறிவுநம்பி வகைப்படுத்தியுள்ளார். இக்கட்டுரையின் நோக்கத்தினை கருத்தில் கொண்டு அந்தந்த கதைகளின் பொருண்மையோடும் புராண வகைப்பாட்டோடும் தெருக்கூத்துக் கதைகளினுடைய

வகைகள் பகுக்கப்படுகின்றன.

தெருக்கூத்துக் கதைகளின் வகைகள்

சமயச் சார்புக் கதைகள்	**சமயச் சார்பற்றக் கதைகள்**
1. மகாபாரதக் கதைகள்	1. கூலிக்குத் தாலி கட்டிய நாடகம்
2. இராமாயணக் கதைகள்	2.அண்டா குண்டா நாடகம்
3. புராணக் கதைகள்	3. கருவாட்டு நாடகம்
4. சிவபுராணக் கதைகள்	
5. கந்தபுராணக் கதைகள்	
6. கிறித்துவம், இசுலாம் கதைகள்	
7. புதுக்கதைகள் (நாவல்ஸ்)	

மேற்காணும் வகைப்பாடானது கொங்கு மண்டல நிகழ்த்து வெளிகளில் உள்ள கூத்துக் கதைகளின் பொருண்மையை மையமாகக் கொண்டு பகுக்கப்பட்டுள்ளது. தெருக்கூத்தானது பெரும்பாண்மையாக வழிபாட்டை மையமிட்டு இருப்பதால் தெருக்கூத்துக் கதைகளும் தெய்வத் தோற்றத்தைக் கூறக்கூடிய சமயச் சார்புடையக் கதைகளே பெரும்பாண்மையாகவும் சமயச் சார்பற்றக் கதைகள் மிகக் குறைவாகவும் காணப்படுகின்றன. புராணச் சார்பு கதைகளுள் மகாபாரதக் கதைகள், இராமாயணக் கதைகள், விஷ்ணுபுராணக் கதைகள், சிவபுராணக் கதைகள், கந்தபுராணக் கதைகள் என கதைகள் பெரும்பாலும் புராணத்தை மையப்படுத்துவதாக அமைகின்றன. கிறித்துவ சமயத்தைச் சார்ந்தக் கதையாக எந்தக் கூத்தும் இல்லை. அன்னை வேளாங்கன்னி என்னும் கூத்துக் கதையானது வடக்கத்திப் பாணியில் நிகழ்த்துவெளியில் உள்ளதை அறியமுடிகிறது. இசுலாமியருக்கு என்று எந்தக் கதையும் எந்தப் பாணியிலும் காணப்படவில்லை. புராணச்சார்பற்றக் கதைகளாக நாவல்ஸ் என்று சொல்லக்கூடிய புதுக்கதைகள் பல நிகழ்த்துவெளிகளில் காணப்படுகின்றன.

தெருக்கூத்தில் புராணம்சார் கதைகள்

தெருக்கூத்தானது நிகழ்த்து வடிவில் இன்று வரையிலும் பெரும்பாலும் புராணக் கதைகளாகவே நிகழ்த்தப்படுகின்றன என்பதனைக் கூத்துக் கலைஞர் ஏகாபுரம் சுப்ரு என்கிற இலட்சுமணன குறிப்பிடுகிறார். அவர் “குண்டு சட்டியில குதர ஓட்டறதுதாங் கூத்து! புளிச்சிப்போன இராமாயணம், மகாபாரதத்த வெச்சே காலத்த ஓட்டறீங்க, புதுசா மாத்துக்கட்டுல எதனா செஞ்சா என்னா?; கேள்வியாக கேட்டதற்கு எது கண்ணு புதுசு? ராக்கிட்டும், ஏரோக்கப்பலும், டீவிப்பொட்டியும், இந்தச் சினிமாவுந்தாம் புதுசு! இந்த

மானங்கெட்ட மனசரும், அவிங்க கோணப்புத்தியும் அன்னைக்கியிருந்தது இன்னைக்கிம் அச்சுக்கொலையாம அப்பிடியே இருக்குதே காண! பாக்காதத பாக்கலாம் பலங்கொண்ட ராமாயணத்துல! கேக்காதத கேக்கலாங் கீர்த்தியுள்ளபாரதத்தல! முக்காலத்துக்கும் உகந்த கருத்து முச்சூடும் அதலாயிருக்குது கண்ணு!" (தவசிக்கருப்புசாமி, அருங்கூத்து, ப.26) என்கிறார். இக்கருத்தில் புராணக்கதையானது தெருக்கூத்து நிகழ்த்து வெளியில் இன்றியமையாத பெருவெளியைக் கொண்டுள்ளதை அறியமுடிகிறது.

புராணசார்புடைய கதைகளின் தாக்கத்தை, "தெருக்கூத்துக்களைப் பொறுத்தவரை பாரதக் கதைகளே மிகுதியாக ஆடப்படுகின்றன. பாரதக் கதைகளே மக்களால் மிகவும் விரும்பப்படுவதாகத் தெருக்கூத்துக் கலைஞர்கள் பலரும் கூறினர். பாரதக்கதையைத் தெருக்கூத்தாக ஆடுவதையே கலைஞர்களும் விரும்புகின்றனர். இதனைக் கலைஞர்கள் பக்தியுடன் கூறுகின்றனர். மகாபாரதத்தின் பதினெட்டு நாள் சண்டைகள், கிருஷ்ணன் தூது, விராடபர்வம், கீட்கனவதை, சுபத்ரா கல்யாணம், அர்ச்சுனன் தபசு போன்ற பல பாரத நிகழ்ச்சிகள் தெருக்கூத்தில் நிகழ்த்தப்படுகின்றன. தமிழகத்தில் நிகழ்த்தப்படும் 56 பாரதக் கூத்துக்களை அறிவு நம்பி (1986 : 93-94) பட்டியலிடுகிறார். பாரதக் கூத்துக்கள் குறைந்தது 13 நாட்கள் முதல் அதிகபட்சம் 67 நாட்கள் வரை நடைபெறுகின்றன. 'இராமாயணம் நாலந்தரம்' என்று கிருட்டினகிரி லட்சுமணன் கூறினார் கேட்டால் இராமணயக் கூத்து நிகழ்த்தப்படும் என்றார். இரமாயணத்தில் வாலி மோட்சம், இந்திரஜித், லவகுசா, லங்காதகனம், பாதுகா பட்டாபிஷேகம் போன்ற தெருக்கூத்துகள் நிகழ்த்தப்படுகின்றன. சிவபுராணம், கந்த புராணம், காத்தவராயன் கதை ஐயனார் திருக்கல்யாணம் போன்ற கதைகளும் நிகழ்த்தப்படுகின்றன" (முனைவர் ஆறு. இராமநாதன், நாட்டுப்புறக்கலைகள்-நிகழ்த்துக்கலைகள், ப.243) என ஆறு. இராமநாதன் அவர்கள் குறிப்பிடுகிறார். தற்போதைய கொங்கு மண்டல நிகழ்த்து வெளியில் புராணக் கதைகளானது இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட வடிவில் நிகழ்த்தப்படுகின்றன.

புராணங்களின் அடிப்படையில் தெருக்கூத்துக் கதைகள்

புராணங்களின் அடிப்படையில் தெருக்கூத்துக் கதைகளை 1.மகாபாரதக் கதைகள் 2.இராமாயணக் கதைகள் 3.விஷ்ணுபுராணக் கதைகள் 4.சிவபுராணக் கதைகள் 5.கந்தபுராணக் கதைகள் என வகைமைப்படுத்தலாம்.

புராணக்கதைகளைத் தெருக்கூத்து நிகழ்த்துவெளியில் கலைஞர்கள் பயன்படுத்தும் அந்தந்த புராணங்களுக்கான பனுவல்களையும் புராணக்கதைகள் பார்வையாளர்களிடையே எவ்வாறெல்லாம் நிகழ்த்துவெளியில் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது என்பது பற்றியும் பின்வருமாறு ஆராயலாம்.

புராணம் சாரா கதைகள் (நாவல்கள்)

தெருக்கூத்து வெளியில் புராணக் கதைகள் மட்டுமின்றி புதுக்கதைகள் (நாவல்கள்),

புராணத் தொடர்பில்லாத கதைகள் 'நாவல்ஸ்' என்று சுட்டுகின்றனர். கற்பனைக் கதை – சித்தரிப்புக் கதைகள் என்றும் இவற்றைச் சுட்டுகின்றனர். சாரங்கதாரா, மாற்றாந்தாய்க் கொடுமை, நல்லதங்காள், குறவஞ்சி, கணவன் உயிர்காத்த கற்பகவள்ளி, சிவஞான வள்ளிமோட்சம், சத்தியாவதி கல்யாணம் முதலானவற்றை நடத்துவதாக கிருட்டினகிரி லட்சுமணன் குறிப்பிடுகிறார்." (கோ. பழனி, சி. முத்துகந்தன், 2011, தெருக்கூத்துக் கலைஞர்கள் களஞ்சியம், ப.245) என்பதன் மூலம் தெருக்கூத்தில்; புராணக் கதைகள் மட்டுமின்றி புராணம் தொடர்பில்லாத கதைகளும் நிகழ்த்தப்படுகிறது என்பதனை அறிய முடிகின்றது. "நாங்கள் பாரதம், இராமாயணம், கந்தபுராணம் அடுத்து பொது புராணம் ஆடுவோம். பொது புராணம் (நாவல்ஸ்) போல வரும். நாங்கள் அதிகமாக ஆடுவது பாரதம்தான். அர்ச்சுனன் தபசு, குறவஞ்சி, பதினெட்டாம் போர், கர்ணமோட்சம், வில்வளைப்பு, கிருஷ்ண தூது, மின்னலொளி சிவபூஜை, பாதலாடும் போக ஜீவனா, சங்கராசூரா மேல் திருமணம் போன்றன ஆடுவோம். அடுத்து ஆதிதிராவிடர்களுக்கு ஆதிநாடகம், வன்னியருக்கு வன்னியப்புராணம், அருந்ததியர்க்கு ரேணுகாம்பாள், ஒட்டருக்கு ஒட்ட நாடகம் போன்றவற்றை நடத்துவோம்" (கோ. பழனி, சி. முத்துகந்தன், 2011, தெருக்கூத்துக் கலைஞர்கள் களஞ்சியம், ப.210) நாவல்ஸ் என்பதனை தெருக்கூத்துக் கலைஞர் மாரியப்பன் என்பவர் பொதுப்புராணம் என்று சாதிசார்ந்தகக் கதைகள் அனைத்திற்கும் புதுக் கலைச்சொல்லைப் பயன்படுத்துகிறார்.

முடிவுரை

தெருக்கூத்துப் பனுவல்களில் பாரதக்கதைகளானது பெருந்தேவனார், வில்லிப்புத்தூரார், நல்லாப்பிள்ளை ஆகியோரின் பனுவல்களை மூலப்பனுவல்களாகக் கொண்டு அமைந்துள்ளதை அறியமுடிகின்றது. அம்மூலப் பனுவல்களிருந்து புராணத்தில் ஒருபகுதி, பகுதியில் ஒருபிரிவு, பிரிவில் ஒருகிளை, கிளையில் ஒருகன்னி எனப் பிரித்து நிகழ்த்தப்படுகிறது. தெருக்கூத்துப் பனுவல் உருவாக்கத்தில் வசனத்திற்கு வில்லிப்புத்தூரார், பெருந்தேவனார் ஆகியோருடையதாகவும் பாட்டு, கவி, கந்தார்த்தம் போன்றவை பயிற்சியுடைய வாத்தியார்களாலும் எழுதப்பெற்று நிகழ்த்துவெளிகளில் காணப்படுகின்றன.

தெருக்கூத்துக் கதைகள் பனுவல்சார் கதை, பனுவல்சாராக் கதையென்று பிரித்து ஆராயப்பட்டுள்ளது. பனுவல்சார் கதைகளாக பி.இரத்தினநாயகர் அண்டு சன்ஸ் என்பார் வெளியிட்டுள்ள நூல்களில் இடம்பெறும் கதைகளும்;, பனுவல்சாராக் கதைகளாக வாத்தியார்கள் சொல்ல அதைச் செவிவழியே கேட்டறிந்து வாய்மொழியாகவும், கண்டுபாவனை வழியாகக் கற்கும் கதைகளும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

துணை நூற்பட்டியல்

1. அறிவுநம்பி, அ., தமிழரின் கூத்தியல், இரண்டாம் பதிப்பு, சித்திரம் வெளியீடு,

புதுச்சேரி 605 008, பதிப்பு - 2015.

2. இராமநாதன், ஆறு., நாட்டுப்புறக் கலைகள் (நிகழ்த்துக் கலைகள்), மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு, சிதம்பரம் - 608 001. முதற்பதிப்பு 2010.

3. சண்முகம், மு., தமிழ்நாட்டில் பாரதம், போதிவனம் பதிப்பகம், இராயப்பேட்டை, சென்னை 600 014, பதிப்பு -2018.

4. தவசிக் கருப்புசாமி, அருங்கூத்து, களரி தொல் கலைகள் மற்றும் கலைஞர்கள் மேம்பாட்டு மையம், மேட்டூர் வட்டம், சேலம் மாவட்டம் -636 453. இரண்டாம் பதிப்பு 2014.

5. பழனி, கோ., முத்துகந்தன், சி., (உ.ஆ) தெருக்கூத்து கலைஞர்கள் களஞ்சியம், ராகாஸ் அச்சாக்கம், சென்னை - 600 014.

References

1. Arivunambi, A., Tamilarin Koothiyal, Second Edition, Chithiram Publications, Puducherry 605 008, Edition - 2015.

2. Ramanathan, A., Folk Arts (Performing Arts), Meiyappan Publishing House, Puducherry, Chidambaram - 608 001. First Edition 2010.

3. Shanmugam, M., Bharatham in Tamil Nadu, Bodhivanam Publishing House, Royapettah, Chennai 600 014, Edition -2018.

4. Tavasik Karuppusamy, Arungoothu, Kalari Ancient Arts and Artists Development Centre, Mettur Taluk, Salem District -636 453. Second edition 2014.

5. Palani, Co., Muthukanthan, C., (U.A.) Terukoothu Artists' Gallery, Ragas Printing Press, Chennai - 600 014.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

வெங்கடேஷ். பெ, “தெருக்கூத்து நிகழ்த்து வெளியில் கதைகள்” புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 4, அக்டோபர் 2025, பக். 28-37

Cite this Article in English

Venkadesh. P, “Stories in the TheruKoothu Performance Area” Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 4, October2025, pp. 28-37